விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 10 வெள்ளிக்கிழமை (24.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 156

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## மீண்டும் பிரதமரானார் மோடி



### மத்தியில் ஆட்சி அமைக்கிறது பாரதிய ஜனதா கட்சி

(டில்லி)

இந்திய லோக்சபா தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி மொத்தமாக 343 ஆசனங்களைப் பெற்று மத்தியில் ஆட்சி அமைக்கின்றது. இதனால் இரண்டாவது தடவையாகவும் இந்திய பிரதமரானார் நரேந்திர மோடி.

இந்திய லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியை தாம் பொறுப்பேற்றுக் கொள்வதாக 23

## யாழ். பல்கலை மாணவர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம்

### பகிஷ்கரிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம் கல்விச் செயற்பாடு எதிர்வரும் திங்கள் ஆரம்பம்




23

## மோ. சைக்கிள் மோதியதில் முதியவர் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் மோதியதில் வயோதிபர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். சுன்னாகம் வரியப்புல வீதி, மதவடியைச் சேர்ந்த 24

## மிருசுவிலில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கொடிகாமம்)

தென்மராட்சி-மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 50வயதான குடும்பஸ்தர் ஒருவர் கல்வயல் பகுதியில் உள்ள வீடொன்றில் 23

## அமைச்சர் ரிஷாத்தை பாதுகாக்கவே ரணில் முயற்சி – எஸ்.பி


(கொழும்பு)

ரிஷாத் பதியுதீன் முஸ்லிம் அடிப்படைவாதிகளுடன் வைத்திருந்த தொடர்பு மற்றும் அவருடைய அமைச்சு பதவியினை பயன்படுத்தி மேற்கொண்ட மோச 23

## பிள்ளையார் ஆலய அத்திபாரத்தை உடைத்து

# புத்தர் சிலையை வைக்க முயற்சி!

### புத்த பிக்கு ஒருவரின் தலைமையில் திருமலை கிண்ணியாவில் சம்பவம்



(திருகோணமலை) கன்னியா வெந்நீருற்று ஏழு கிணறுகள் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் பிள்ளையார் ஆலயத்தின் அத்திபாரம் உடைக்கப்பட்டு குறித்த இடத்தில் புத்தர் சிலை அமைக்கும் பணிகளை புத்த பிக்கு ஒருவரின் தலைமையிலான சிலர் கடந்த ஒரு வார காலமாக மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.(23-ம் பக்.)

## மக்கள் அரசியலை விமர்சிக்கவும் வெறுக்கவும் நடப்பு அரசே காரணம்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



(கொழும்பு)

நடப்பு அரசாங்கம் தேர்தலின் ஊடாக படுதோல்வியடையும் என்பதை சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. அத்தோடு, அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளில் அதிருப்தியடையும் பொது மக்கள் கடுமையாக தங்களின் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். 225 பாராளுமன்ற 23

## எந்த சதித்திட்டத்தாலும் அரசை வீழ்த்த முடியாது

### சபையில் அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணையானது ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களுக்கும் எதிராக 24

## போருக்கு முன்னரான வளமான வடக்கு மீண்டும் உருவாகும்

### பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ

(யாழ்ப்பாணம்)

போருக்கு முன்னரான வளமான வடக்கு மாகாணம் மீண்டும் மிக விரைவில் உருவாகும் என, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் 23

### தமிழக அரசியலில் சீமான் எழுச்சி

## தி.மு.க அபார வெற்றி

### படுதோல்வியடைந்த தமிழிசை; சில இடங்களில் கமல் ஆதிக்கம்

(சென்னை)

இந்திய லோக்சபா தேர்தலில் தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் கூட்டணி 36 ஆசனங்களையும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன. ஏனைய கட்சிகள் எந்த ஆசனங்களையும் பெறவில்லை. எனினும் சீமான் தலைமையிலான நாம் 23

## விமல் வீரவன்சவுக்கு சபாநாயகர் கரு சபையில் எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்குள் அச்சுறுத்தி எதனையும் சாதித்துக்கொள்ள முடியும் என்று நினைக்கவேண்டாம். அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என சபாநாயகர் கருஜயசூரிய, விமல் வீரவன்சவுக்கு அறிவுறுத்தும் வகையில் நேற்று எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றம் நேற்று 23

### அமைச்சர் ரிஷாத் தொடர்பான அறிக்கை

## இரண்டு வாரத்துக்குள் சமர்ப்பிக்கப்படும் - பிரதமர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாரா 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**கழிவகற்றல் செயற்பாட்டிற்காக உழவு இயந்திரம் மற்றும் இழுவைப் பெட்டி என்பவற்றை சாரதியுடன் வாடகைக்கு பெற்றுக் கொள்ளல்**

01. தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேவையான தகைமைகள், மேலதிக தகவல்கள் பெறுகை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமை யலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 27.05.2019 ஆம் திகதியிலிருந்து 10.06.2019ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள வழங்குனர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப் பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலி காமம் கிழக்கு பிரதேச சபையில் 27.05.2019 தொடக்கம் 10.06.2019ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/- (வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
05. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 11.06.2019ம் திகதி 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வி யானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறு கையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
06. இக்கேள்வி கோரலில் உள்ளநிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலைவிபரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | விண்ணப்பப்படிவக கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கழிவகற்றல் செயற்பாட்டிற்காக உழவு இயந்திரம் மற்றும் இழு வைப் பெட்டி என்பவற்றை சாரதியு டன் வாடகைக்கு பெற்றுக் கொளளல் | NP/14/41(15) /Tractor Service/2018 | 06 மாதம் | 1000.00 |

தியாகராஜா நிரோஷ், தவிசாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

23.05.2019 (C-6458)

## நன்றி செலுத்தும் வழிபாடு



"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம் இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே, வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்." (உரோமையர் 14:8)

கர்த்தருக்குள் நித்திரையடைந்து நித்திய வாழ்வுக்குள் பிரவேசித்துள்ள

**வீரவாகு கபிரியேல் கனகசிங்கம்**

அவர்களின் வாழ்விற்கு நன்றி செலுத்தும் வழிபாடு

நாளை வைகாசி (மே) மாதம் 25ம் திகதி சனிக்கிழமை, 2019 காலை 11.00 மணிக்கு யாழ்.வீதி உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

*இவ்வழிபாட்டிலும் மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்*

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

திருமதி ஜெ.பு.கனகசிங்கம், வி.நோ.விஜயரூபன்
த.ஜ.ஜெபதர்சன், வி.டா.ஜெயரூபன் (+94)0777 865 512

(8909)


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)





மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

✌ *கேக் ஐசிங்* – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

✌ *உணவு தயாரித்தல்* – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.

✌ *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.





✌ FACIALS *(முக அழகுக்கலை)*
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

✌ BRIDAL DRESSINGS
*(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**



✌ *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் மகளிருக் கான ஆடைகள் தைக்கும் சான்றிதழற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!



**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**29.05.2019 புதன் காலை 10.00 மணி**
**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**01.06.2019 சனி காலை 10.00மணி**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

Guru



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு 8 எம்.பிக்கள் நியமனம்

ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கண்டறிந்து, பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான விசேட தெரிவுக்குழுவுக்கு, 8 உறுப்பினர்களை சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று நியமித்துள்ளார். நேற்று முற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்றம் கூடியபோது, இந்தக் குழு தொடர்பான அறிவித்தலை சபாநாயகர் விடுத்தார்.

பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிங்க தலைமையிலான இந்தக் குழுவில், பாராளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ரவூப் ஹக்கீம், ரவி கருணாநாயக்க, ஜயம்பதி விக் கிரமரத்ன, கவிந்த ஜயவர்தன, ஆசு மாரசிங்க, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (ம-3)

## ஞானசாரரின் விடுதலைக்கு கூட்டமைப்பு கண்டனம்



பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் விடுதலை செய்யப் பட்டமைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம் வெளி யிட்டுள்ளது.

ஞானசார தேரரை விடுதலை செய்தமையின் ஊடாக ஜனாதிபதி அரசியல் சாசனத்தினை துஷ்பிரயோகம் செய்துள்ளார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.


ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் ஞானசார தேரர் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் அடிப்படையில் ஞானசார தேரருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.


ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையானது அதிகார துஷ்பிர யோக மான விடயம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

# இந்தியப் பிரதமராக மீண்டும் மோடி இலங்கைத் தலைவர்கள் வாழ்த்து









(கொழும்பு)

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமை மீண்டும் இந்திய மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள் ளமைக்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வாழ்த்து தெரி வித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற தேர்த லில் பாரதிய ஜனதா கட்சி முன் னிலை பெற்றுள்ள நிலையில் பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்கள் குவிந்த வண்ண முள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரி தனது டுவிட்டர் பக் கத்தில் மேற்கண்டவாறு வாழ் த்து தெரிவித்துள்ளார். மேலும், இந்தியாவுடனான ஆக்கபூர்வமான உறவை தொடர்ந்து எதிர்பார்ப்ப தாகவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் மோடி யின் வெற்றி அவர் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் தெளிவான வெளிப்பாடு என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமருக்கு வாழ் த்து தெரிவிக்கும் வகையில் பிரத மர் ரணில் வெளியிட்டுள்ள செய் திக் குறிப்பிலேயே மேற்கண்ட வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷவும் இந்திய பிரதம ருக்கு டுவிட்டர் மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளார். நாட்டை முன் னோக்கி கொண்டு செல்வதற் கான உங்கள் பயணம் தொடரட் டும் என அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)


# வடக்கு-கிழக்கு தமிழர் நிலங்களில் ராணுவ அனுசரணைகளுடன் குடியேற்றம்

❖ பௌத்த மேலாதிக்கத்தை ஏற்படுத்தவும் நடவடிக்கை

❖ மனிதவுரிமை மீறல்களைக் கண்காணிக்க இலங்கையில் குழு

❖ விசேட பிரதிநிதியை நியமிக்குமாறு வலியுறுத்தி

## ஐ.நா.செயலருக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் கடிதம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்பு குழு ஒன்றை இலங்கையில் அமைக்க வேண்டும் என்றும் ஐ. நா. மனித உரிமைகள் சபையின் விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதிய ரசர் விக்னேஸ்வரன் ஐ. நா. செய லாளர் நாயகம் அந்தோனியோ குற்றேரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

வடக்கு- கிழக்கில் பெருமள வில் இராணுவம் குவிக்கப்பட்டு தமிழர் நிலங்களில் இராணுவ அனுசரணைகளுடன் குடியேற் றங்கள் நடைபெறுவதாகவும் பௌத்த மேலாதிக்கத்தை தொடர் ந்து ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் நீதியரசர் விக்னேஸ்வரன் இந்த கடிதத்தில் குற்றம் சாட்டியுள் ளார்.

இராணுவமானது வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்டு ள்ளமையானது நாட்டின் ஏனைய பகுதிகளை பயங்கரவாத அச்சு றுத்தல்களில் இருந்து பாதுகாக் கும் அதன் தன்மையை விட்டுக் கொடுக்கும் வகையில் அமை கின்றது.

அதேவேளை, தமிழ் மக் களை அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அடக்குமு றைக்குட்படுத்தும் வகையில் அவசரகாலச் சட்டத்தை அரசா ங்கம் துஷ்பிரயோகம் செய்வது டன், தமிழர் நிலங்களில் இரா ணுவ அனுசரணையுடன் குடி யேற்றங்கள் நடைபெறுவதற்கும் பௌத்த மேலாதிக்கத்தை தொட ர்ந்து ஏற்படுத்துவதற்கும் அனு மதிக்கின்றது.

இலங்கை தீவின் வடக்கு- கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்களை கண்காணிப்பதற்கு ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் கண் காணிப்புக்குழு ஒன்றை அமைப் பதற்கான அவசியம் குறித்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் உங்களிடம் விடுத்த கோரிக் கையை அவசரமாக உங்கள் கவனத்துக்கு கொண்டுவருகின் றேன்.

அத்துடன் மனிதவுரிமை கள் தொடர்பில் இலங்கைக்கான விசேட பிரதிநிதி ஒருவரை ஐ.நா. மனிதவுரிமைகள் சபை நிய மிக்க வேண்டும் என்றும் வலி யுறுத்துகின்றேன்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வவுனியாவுக்கும் யாழ்ப்பா ணத்துக்கும் இடையில் தற்போது 10 வரையிலான இராணுவ காவ ரைண்கள் அமைக்கப்பட்டுள் ளன. ஆனால், வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையில் அநேக மாக அப்படியான எந்த காவல ரண்களும் அமைக்கப்படவில்லை. இந்த இராணுவ காவலரண்கள் எண்ணற்ற மனித உரிமை மீறல் கள் இடம்பெறும் இடங்களாக வும், தமிழ் மக்கள் குறிப்பாக பெண்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படும் இடங்களாக வும், தன்னிச்சையாக தடுத்து வைக்கப்படும் இடங்களாகவும் இருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர் களின் குடும்பங்கள் சமர்ப்பித் துள்ள ஏராளமான மனுக்களை கவனத்தில் எடுத்து இலங்கைக் கான ஐ. நா. மனித உரிமைகள் சபையின் விசேட பிரதிநிதி ஒரு வரை நியமிக்கவேண்டிய அவசர தேவையை வலியுறுத்துகின் றேன்.

கடந்த 10 வருடங்களில் படை யினரால் மேற்கொள்ளப்பட்ட தாக முறைபாடு செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறல்களை யும் இந்த விசேட பிரதிநிதி கவனத்தில் எடுக்கவேண்டும். இறுதி யுத்தத்தின்போது இராணு வத்தினரால் கொல்லப்பட்ட மற் றும் கணக்கில் வராமல் காணா மல் போயுள்ள 70 ஆயிரத்திற் கும் அதிகமான மக்களை 10 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நாள் நினைவு கூர்ந் தது. இந்த அப்பாவி மக்கள் தவிர, அரசாங்க படைகளிடம் வெள் ளைக் கொடிகளுடன் சரண் அடைந்த விடுதலைப்புலிகளின் உயர்மட்ட உறுப்பினர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆகவே, இந்த தருணத்தில், இலங்கையில் யுத்தத்தின் போதும் யுத்தத்துக்கு பின்னரும் நடை பெற்ற, நடைபெறும் மோசமான மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை நான் வலியுறுத்துகின்றேன். இது சர்வ தேச சட்டம், பாதுகாப்பு ஆகிய வற்றின் ஆட்சிக்கும் பிராந்திய த்தின் செம்மைக்கும் மிகவும் முக்கியமானது என அந்தக் கடி தத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# தென்மராட்சி செயலகத்தில் இராணுவம் சோதனை



தென்மராட்சிப் பிரதேச செயல கத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பலத்த பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு சோதனை நடத்தப்பட்டதால் பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் பல்வேறு அசௌ கரியங்களை எதிர்கொண்டனர். இதுவரை காலமும் பிரதேச செயலகத்திற்கு பாதுகாப்பு வழங் கப்படாத நிலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை காலை இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து பாதுகாப்புக் கடமை யில் ஈடுபட்டதால் உத்தியோகத் தர்கள் மற்றும் பொதுமக்கள் மத் தியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இதேவேளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் நீண்ட நேரக் காத் திருப்பின் பின்னர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த னர். பொதுமக்களால் பிரதேச செயலக வாயிலில் முன்னெடுக் கப்படவிருந்த ஆர்ப்பாட்டம் ஒன்றைத் தடுப்பதற்காகவே பாதுகாப்பு ஏற்பா டுகள் செய்யப்பட்டுள்ளன என்ற விடயம் தெரியவந்துள்ளது குறிப் பிடத்தக்கது. (இ-5-30)

# அமைச்சர் றிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது ஜூன் 18,19ம் திகதிகளில் விவாதம்

## சபாநாயகர் நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனு க்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் ஜூன் மாதம் 18, 19 ஆம் திகதிகளில் விவாதிக்கப்பவுள்ளது.

சபாநாயகர் கருஜெயசூரிய இது குறித்து நாடாளுமன்றில் நேற்று அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தற்கொ லைத் தாக்குதல் தொடர்பில் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கூட்டு எதிர்க்கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் களால் கொண்டு வரப்பட்டிருந் தது.

இந்த நிலையில் மேற்படி பிரேரணை குறித்து விவாதம் செய்வதற்காக திகதியொன்றை நிர்ணயம் செய்வதற்காக நேற்று காலை இடம்பெற்ற கட்சித் தலை வர்கள் கூட்டத்தில் இணக்கப்பாடு கள் எட்டப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறித்த நம்பிக்கையில்லாப் பிரே ரணை குறித்து எதிர்வரும் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் விவா திக்கப்படும் என சபாநாயகர் அறிவித்துள்ளார். (இ-7)



# கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்
திரு.செ.இராஜ்குமார் அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர்

**செல்லையா செல்வராசா**

அவர்களது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**ஆசிரிய சகோதரத்துவம்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

(C-6463)





# 31ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 . 05 . 1936

மறைவு 23 . 04 . 2019

யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில்
முதன்மை லிகிதராகக் கடமையாற்றும்
திரு.சி.உமாகாந்தன் அவர்களின் தந்தையார்

அமரர் ஆறுமுகம்
சீவரத்தினம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி சங்க சமூகம்,
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(C-6405)


## உலகக் கிண்ண கிரிக்கெட்

மே 30 - யூலை 14

கவுண்ட் டவுண் 06 2019

ICC CRICKET WORLD CUP ENGLAND & WALES 2019



உலகக்கிண்ணத் தொடருக்காக இங்கிலாந்து சென்று சேர்ந்த இந்திய வீரர்கள்

# அதிர்ச்சியளித்த கில்கிறிஸ்ட் 'நடை'



அடம் கில்கிறிஸ்ட்

அதிரடி ஆட்டத்துக்கு பெயர் பெற்ற அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட், 2003ல் நடந்த உலக கிண்ண அரையிறுதியில் தனது நேர்மையை வெளிப்படுத்தினார். இப்போட்டியில் வழக்கம் போல் கில்கிறிஸ்ட் அசத்தல் ஆரம்பம் கொடுத்தார். இவரை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 6வது ஓவரிலேயே சுழற்பந்துவீச்சாளரான அரவிந்த டி சில்வாவை அழைத்தார் இலங்கை அணியின் தலைவர் ஜெயசூர்ய. இதற்கு நல்ல பலன் கிடைத்தது.

இவரது பந்தை கில்கிறிஸ்ட் அடிக்க, அதனை விக்கெட் காப்பாளர் சங்கக்கார துடிப்பாக பிடித்து 'முறையீடு' செய்தார். ஆனால், நடுவர் ருடி கேட்சன் 'ஆட்டமிழப்பு' வழங்க மறுத்தார். இந்த நேரத்தில் சற்றும் எதிர்பாராதவகையில் கில்கிறிஸ்ட் 'பெவிலியன்' நோக்கி நடந்து அதிர்ச்சி கொடுத்தார். அடுத்து ரிக்கி பொன்ரிங் (2), ஹைடன் (20) விரைவில் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து கில்கிறிஸ்ட் செயல் அணிக்கு பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற அச்சம் ஏற்பட்டது. பின் சைமண்ட்ஸ் (91) கைகொடுக்க, அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்கள் எடுத்தது.

அடுத்து களமிறங்கிய இலங்கை அணி, பிரட் லீ 'வேகத்தில்' அதிர்ந்தது. 38.1 ஓவர்களில், 123 ஓட்டங்களுக்கு சுருண்டது. 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற அவுஸ்திரேலிய அணி, இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. தனது செயல் குறித்து கில்கிறிஸ்ட் கூறுகையில், "எனது உள்ளுணர்வு 'அவுட்' என்று சொன்னதால் நான் வெளியேறினேன்." என்றார்.

**தெரியுமா?**

கடந்த 2003ல் நமீபியாவுக்கு எதிரானபோட்டியில் விக்கெட் காப்பாளராக அசத்திய அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட், 6 'பிடிகளை' எடுத்தார். இதன் மூலம் உலக கிண்ண அரங்கில் ஒரு இன்னிங்சில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்ச்சிக்கு வித்திட்ட விக்கெட் காப்பாளர் என்ற புதிய சாதனை படைத்தார். இவரது சாதனையை கடந்த 2015ல் நடந்த உலக கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் விக்கெட் காப்பாளர் சர்பராஸ் அகமட் (6 பிடி, எதிர்: தென்னாபிரிக்கா) சமன் செய்தார்.


# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTAD தரம்/பதிவு | கேள்விப்பிணைப் பணம் செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | KN/DPS/ DO4/ONU/ 172-1 | கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்க மூன்றுமாடி வர்த்தக கட்டடம் நிர்மாணம் - கட்டம் II | 6.52 மில்லியன் (வரி நீங்கலாக) | C7 and C6 Building | ரூபா 65,500.00 வங்கிப் பிணை 26.09.2019 வரை | ரூபா 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்குடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (ii) இலக்க 08.05.2019 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு 5% முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை 24.05.2019ஆம் திகதியிலிருந்து 13.06.2019ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "KN/ ........................." என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 14.06.2019ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
7. கேள்வி கோரலுக்கு முன்னரான தெளிவுபடுத்தல் கூட்டம் (Pre bid meeting) 07.06.2019ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சுந்தரம் அருமைநாயகம்
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-6459)


# 'என்னைப் பார்த்தாலே பயம்' கிறிஸ் கெய்ல் பெருமிதம்

"பந்துவீச்சாளர்களுக்கு என்னைப் பார்த்தாலே பயம். இதை கேமரா முன் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்," என கெய்ல் தெரிவித்தார்.

உலக கோப்பை கிரிக்கெட் தொடரில் இரு முறை சாம்பியன் (1975, 1979) ஆனது வீண்டீஸ் அணி. இம்முறை தகுதிச்சுற்றில் பங்கேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. இருப்பினும் கெய்ல் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் வரவு, மே.தீவுகள் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து மே.தீவுகளின் 'சீனியர்' வீரர் கெய்ல் கூறியதாவது,

இளம் பந்துவீச்சாளர்கள் எனது விக்கெட்டை வீழ்த்துவதில் தீவிரமாக இருப்பர். இதனால் வரும் உலக கிண்ணத் தொடர் முன்பு போல அவ்வளவு எளிதாக இருக்காது. ஆரம்ப காலங்களில் வேகமாக ஓட்டங்கள் குவித்தேன். அவர்கள் பயந்தனர். தவிர 'யூனிவர்ஸ் பொஸ்' என்ன செய்வார் என நன்கு தெரியும். 'கிரிக்கெட் உலகின் மிக அபாயகரமான துடுப்பாட்டக்காரர் நான் தான்,' என அவர்களது மனதில் வந்து செல்லும்.

இவர்களிடம் சென்று 'கெய்லை பார்த்தால் பயமா,' என கேட்டால் கமரா முன்பு 'இல்லவே, இல்லை' என்பர். தனியாக சென்று பேசினால், 'கெய்ல்... கெய்ல் தான்,' என்பர். இவ்வாறு கெய்ல் கூறினார்.

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603,**
**021 567 1532**

**குருவே துணை**



**வாழ்க வையகம்** **வாழ்க வளமுடன்**

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்**

## புத்தாக்கப் பயிற்சி

25.05.2019 நாளை சனிக்கிழமை அன்று இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் முதுநிலைப் பேராசிரியர்களான அருள்நிதி R.ஜெயபால் மற்றும் அருள்நிதி உழவன் முத்துவேல் அவர்களால் பிரம்மஞானம் மற்றும் ஆசிரிய பயிற்சி முடித்தவர்களுக்கான புத்தாகப் பயிற்சி நடாத்தப்படவுள்ளது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

காலம்: 25.05.2019
நேரம்:- காலை 9.00 மணி
இடம்:- யாழ்.அறிவுத்திருக்கோவில்

## ஆளுமைத் திறனாக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

* எளிய முறை உடற்பயிற்சிகள்
* எளியமுறை தியானப்பயிற்சிகள்
* காயகல்பப் பயிற்சி
* அகத்தாய்வுப் பயிற்சிகள்

**காலம்: 25.05.2019 திங்கட்கிழமை தொடக்கம் 31.05.2019 வெள்ளிக்கிழமை வரை**
**நேரம்:- மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை**
**பயிற்சிகளை வழங்குபவர்கள்:- மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி R.ஜெயபால்**
**மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி உழவன் முத்துவேல்**
**துணைப்பேராசிரியர் த.நந்தகுமரன்**

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்,
இல.81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,
தொ.இல:- 021 222 2772
(C-6456)

# றிசாத்துக்கு எதிரான பிரேரணை கொண்டுவர எந்தத் தேவையுமில்லை

## தயாகமகே தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர எந்தவிதத் தேவையும் இல்லை என அமைச்சர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

றிசாத் பதியுதீனுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அவர் தனது பதவியில் இருந்து விலகிக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஸ்வீட்ஹோம் புதிய கடன்திட்டம் அடுத்தவாரம் முதல் நடைமுறைக்கு

## நிதியமைச்சர் மங்கள தெரிவிப்பு



ஸ்வீட் ஹோம் என்ற புதிய வீடமைப்பு கடன் திட்டம் அடுத்தவாரம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர அறிவித்துள்ளார். நாடு முழுவதுமுள்ள பிரதேச அபிவிருத்தி வங்கிகளுக்கென தெரிவு செய்யப்பட்ட 304 பயிலுநர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நிதியமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் அவரது அமைச்சில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

புதிதாக திருமணமான இளம் தம்பதியினருக்கு வீடொன்றை பெற்றுக் கொள்வதற்காக ஸ்வீட் ஹோம் வீடமைப்புக் கடன் திட்டம் வழங்கப்படவுள்ளது. இந்த நிலையில் குறித்த புதிய கடன் திட்டமானது அடுத்தவாரம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் குறைந்தது 6.75 சதவீத வட்டிக்கு ஆகக்கூடிய தொகையாக 10 மில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன். இதனை இளம் தம்பதியினர் 25 வருடங்களில் திருப்பிச் செலுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
நிருஷா ஜீவபாலன்
(192 புள்ளிகள்)



செல்வன்
பாலமுரளி யனுஷன்
(190 புள்ளிகள்)



செல்வி
அன்பானுகா நித்தியானந்தராஜா
(187 புள்ளிகள்)



செல்வன்
ஜெயசுதாகர் சாருகன்
(177 புள்ளிகள்)



செல்வி
அபிராமி உதயகுமார்
(9A)

2018ம் ஆண்டின் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களையும் க.பொ.த. சாதாரண தரத் தேர்வில் 9ஏ பெற்றுக்கொண்ட மாணவியையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மென்மேலும் கற்றுயர்ந்து பல்துறைகளிலும் பிரகாசித்துப் பிரதேசத்திற்குப் பெருமை சேர்க்க இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். இவர்களுக்கான கௌரவம், ஊக்குவிப்பு, பரிசில்கள் 25.05.2019 நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் வழங்கப்பெறும்.

(8902)

கந்தையா கனகம்மா நிதியம், தச்சன் தோப்பு, கைதடி.

## இராசி பலன்

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் தேவை, பகைவர்களும் நண்பர்களாக மாறலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பிரயாணபயமுண்டு, சஞ்சலங்கள் கூடும்.

**கடகம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப் பால் உள்ளம் மகிழ்வீர்கள்; உங்களின் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**சிம்மம்:** பழைய கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கை கூடும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும் ,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர் கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.

**துலாம்:** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளொன்றை வாங்கும் வாய்ப்புண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், காரிய அனுகூலம் உண்டு.

**தனுசு:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

**கும்பம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் சம்பந்தமான பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.

**மீனம்:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள் வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் ராகு |
| | இராசி பலன் | | |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர்பூசம் | | |
| சனி, கேது | குரு | | |

**24.05.2019**

வைகாசி 10, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

சஷ்டி முழுவதும்

உத்தராடம் முற்பகல் 8.46 மணிவரை

சுபநேரம் 5.52-7.22 மணிவரை

இராகுகாலம் 10.22-11.52 மணிவரை

வளவன்

# வட மாகாண விவசாய அபிவிருத்திக்கு 489 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் துறையை ஊக்குவிப்பதற்கு மத்திய அரசாங்கத்தின் 489 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கி குறித்த அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வடமாகாண விவசாயத் திணைக்களத்தை மேம்படுத்துவதற்கும் விவசாய உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கும் இவ் வருடம் 218 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் வடமாகாண நீர்ப்பாசனத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 133 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதோடு முதற்கட்டமாக 46 மில்லியன் ரூபாய் செலவில் குளங்கள், வாய்க்கால்கள், விவசாய வீதிகள் என்பன புனரமைக்கப்படவுள்ளன.

வடமாகாணமீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்யவென 18 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதோடு முதற்கட்டமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் 5 மில்லியன் ரூபாய் செலவில் குளங்களில் மீன் குஞ்சுகளை விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும் வடமாகாணக் கால்நடை உற்பத்திப் பிரிவை ஊக்குவிக்கும் நோக்கில் 120 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே குறித்த நிதிகளுக்கான முதற்கட்ட வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப் படவுள்ள நிலையில் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளுக் கான அனுமதி வெகு விரைவில் கிடைக்குமென வடமாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (5-10-110)

# பரிசுப் பொருட்கள் பெறுவது தண்டனைக்குரிய குற்றம்

## பொது நிர்வாக அமைச்சு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியர்கள் பரிசுப் பொருட்களையோ அல்லது ஏனைய இலாபப் பயன்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெறுவது இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழும், அரச தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கமைய தண்டனைக்குரிய குற்றமென பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபமொன்றை வெளியிட்ட பொது நிர்வாக அமைச்சு அரச ஊழியர்கள் பொருட்களையோ அல்லது ஏனைய இலாபப் பயன்களைப் பெற்றமை நிரூபிக்கப்பட்டால் இலஞ்ச ஊழல் சட்டத்திற்கமைய 7 வருடச் சிறைத் தண்டனையும் 5 ஆயிரம் ரூபாய் வரையான நீதிமன்றத் தண்டமும் விதிக்கப்படும் என பொது நிர்வாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (5-10)

# முதியோர் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகத்தின் ஜே/77, ஜே/78 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவிலுள்ள முதியோர்களுக்கான மருத்துவ முகாம் இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இதில் பங்குபற்ற வருபவர்களை தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றைக் கொண்டு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# 5.30 மணிக்கு விசேட ஒலியுடன் கழிவகற்றும் வாகனம் வரும்

## யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் குடியிருப்பாளர்களின் வீட்டுத் திண்மக்கழிவகற்றல் செயற்பாடு தொடர்பில் யாழ். மாநகர சபையினால் புதிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் குறித்த புதிய திண்மக்கழிவகற்றல் பொறிமுறையை முறையாக ஒழுங்குபடுத்தும் வகையில் இத்திட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை மாநகரசபை வளாக முன்றலில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

குறித்த திட்டத்திற்கமைய யாழ். மாநகரின் தூய்மை, துர்நாற்றம் அற்ற சூழல் என்பவற்றை உருவாக்கும் பொருட்டு இரண்டு முறைமையில் இப்பொறிமுறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அதாவது முதலாவது பொறிமுறைமையானது சமையலறைக் கழிவுகளால் சூழலில் ஏற்படும் தாக்கங்கள், துர்நாற்றங்களை தினமும் அதிகாலையிலேயே அகற்றி மாநகரினதும் குடியிருப்புப் பிரதேசங்களினதும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துவதாகும்.

அந்தவகையில் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் விசேட இசையொன்று ஒலித்துக்கொண்டு காலை 5.30 மணி முதல் மாநகரசபையின் கழிவு காவும் வண்டிகள் தங்கள் பகுதிகளில் கொண்டுவரப்பட்டு தங்கள் வீடுகளிலுள்ள சமையலறைக் கழிவுகள் மாத்திரமே எமது ஊழியர்களால் எடுத்துக் கொள்ளப்படும். ஏனைய வீட்டுக் கழிவுகள், குப்பைகள் இரண்டாவது பொறிமுறை அமுலுக்கு வரும்,வரை வழமையான திண்மக் கழிவகற்றல் முறை மூலம் இடம்பெறும்.

மேலும் சமையலறைக் கழிவுகளை வழங்கும் போது அதனுள் பிளாஸ்ரிக் மற்றும் கண்ணாடிக் கழிவுகளைத் தவிர்த்து குறிப்பாக உக்கக்கூடிய சமையலறைக் கழிவுகளை மாத்திரம் போடுமாறும், அவ்வாறு சமையலறைக்கழிவுகள் தவிர ஏனைய கழிவுகள் போடப்பட்டால் உரியவர்கள் மீது தண்டப்பணத்துடன் கூடிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த மாநகரின் தீர்மானத்தை தங்களின் முழுமையான கவனத்திற்கு எடுத்து மாநகர சபையின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி சுத்தமான பசுமை மாநகரை உருவாக்கும் எமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு மாநகர மக்களை மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் கேட்டுக் கொண்டுள்ளார். (7-5)

# சுவிஸ் தூதரகத்தின் செயலாளர் ஆளுநர் சந்திப்பு



இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் முதல் செயலாளர் Mr.Damiano Sguaitamatti ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இலங்கையில் தனது பணிக்காலத்தை நிறைவு செய்து அடுத்த மாதம் மீண்டும் சுவிஸிற்கு திரும்பவுள்ள Mr.Damiano மரியாதை நிமித்தம் ஆளுநரை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் வட மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. (7-5)

# எழுத்தாளர்களை ஊக்குவிக்க திணைக்களத்தால் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இவ் வருட கலாசார செயற்றிட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேசத்தில் வாழும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தில் நிதி உதவி வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் ஊடாக உதவி பெற விரும்பும் கலைஞர்கள் தங்களது விண்ணப்பத்தை கிராம அலுவலர் ஊடாக உறுதிப்படுத்தி நூலின் கையெழுத்துப் பிரதியுடன் செயலக கலாசார உத்தியோகத்தரிடம் வழங்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் அறிவித்துள்ளார். (5)

# பரிசில் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


கைதடி தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதியத்தின் பரிசில் நாள் நிகழ்வு நாளை 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் கந்தையா கனகம்மா நினைவாலயத்தில் நாவற்குழி சா.பி.ச. உப பணிமனைப் பொறுப்பதிகாரி இ.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறும்.


இந் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிப் பேராசிரியர் க.இ.கமலநாதன், கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் வை.செல்வம், நாவற்குழி மகாவித்தியாலய ஓய்வு நிலை அதிபர் திருமதி. சுசீலா செல்வராஜா,கோவிலாங்கண்டி கிராம உத்தியோகத்தர் பவித்திரா தர்மதுரை, நாவற்குழி சா.பி.ச. பணிமனை ஓய்வுநிலை பொறுப்பதிகாரி நா.தங்கவேல் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# நூல் வெளியீட்டு நிகழ்வு

ஓய்வு நிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந.அரியரத்தினம் எழுதிய "சந்நிதியான் அற்புதங்கள்" பாகம் ஒன்பது, "சாதனைக்கு வித்திட்ட மண்" ஆகிய இரு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு இன்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் த.குகராசா தலைமையில் நடைபெறும்.

இதில், வெளியீட்டுரைகளை ஓய்வுநிலை இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளர் ந.சிவரட்ணம்,உளவளத்துணை- சட்டக் கல்வி பயிற்றுவிப்பாளர் வி.சுமதீஸ்வரன் ஆகியோர் வழங்குவர். (5)




கடந்த மாதம் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாநகர சபையில் முதல்வர் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.



உயிர்த்த ஞாயிறு தினத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மெழுகுவர்த்தி ஏந்தி நினைவுப் பிரார்த்தனை கோப்பாய் தேசோதய அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.



கரவெட்டி மேற்கு நற்பணி மன்றத்தால் சமூக ஆர்வலர்கள் சீவரத்தினம் வேலும்மயிலும் செல்வரத்தினம் நினைவாக வேரூன்றி மயானத்தைச் சிரமதானப் பணி மூலம் கடந்த வாரம் துப்புரவு செய்தனர். இச் சிரமதானப் பணியில் கலந்து கொண்ட நற்பணி மன்ற உறுப்பினர்களையும் சிரமதானப் பணியைப் பார்வையிட வந்த கரவெட்டிப் பிரதேச செயலாளரையும் படங்களில் காணலாம். (10-60)





# மயிலணி வடக்கு - சுன்னாகம்
# மனோன்மணி அம்பிகா சமேத
# அண்ண மகேஸ்வரர்
## தேவஸ்தானம்

# வைகாசி விசாகப் பொங்கல் விழா சிறப்பிதழ்

## 24.05.2019 வெள்ளிக்கிழமை

காலை 7.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி
தொடர்ந்து பொங்கல் மற்றும் சிறப்புப் பூஜை வழிபாடுகள்
நடைபெறவுள்ளன. அடியார்கள் அனைவரும்
இவ்விழாவில் கலந்து எம்பெருமானின்
திருவருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**


கந்தையா பலசரக்கு வாணிபம்



மயிலணி வடக்கு, சுன்னாகம்.
TP:No. 077 045 8277

மாருதி பந்தல் சேவை



இல. 267, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
TP:077 788 5009

தரணி அலுமினியம் பிற்றிங் சென்ரர்



மயிலணி வடக்கு, சுன்னாகம்.
TP:077 646 2925

நியூ தயா மரக்காலை



இல. 175, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
TP:077 404 8845

ACT அலுமினியம் கிளாஸ் ஸ்ரோர்



கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
TP:076 615 3080

நியூ அசோகா அலுமினியம் பிற்றிங் சென்ரர்



இல. 63, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
TP:077 360 9034

பரனிகா மல்ரி சென்ரர்



கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
TP:072 741 0412

ஆ. கங்காதரன் தச்சுத் தொழிலகம்



மயிலணி வடக்கு, சுன்னாகம்.
TP:077 284 4049

ஐங்கரன் ஸ்ரோர்



மயிலணி வடக்கு, சுன்னாகம்.

லம்போதரன் ஹாட்வெயார்



கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

மோகன் மரத் தொழிற்சாலை



கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம் சந்தி.

(8903)

சஞ்சீவன் அலுமினியம் பிற்றிங் சென்ரர்

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.



TP:077 057 4506

தாரா ஸ்ரோர்ஸ்

மயிலணி வடக்கு, சுன்னாகம்.



# தற்கொலைதாரியுடன் தொடர்பு! பல்கலைக்கழக மாணவன் கைது

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல இடங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலை குண்டுதாரியுடன் தொடர்பைப் பேணியதாகக் கூறப்படும் பல்கலைக்கழக மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

கொழும்பு பல்கலைக்கழக மாணவன் ஒருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டல் தற்கொலைக் குண்டுதாரி இன்ஷாப் அஹமட்டுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியதாக தெரிவித்தே குறித்த மாணவன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்கொலைக் குண்டுதாரியின் கையடக்கத் தொலைபேசியை சோதனையிட்ட போது கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மற்றும் தற்கொலைக் குண்டுதாரி இன்ஷாப் அஹமட் ஆகியோருக்கிடையில் கையடக்கத்தொலைபேசி மூலம் தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரிடம் பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# றிசாத் தொடர்பில் விசாரணைகளின்றி வாக்களிக்க முடியாது

## வசந்த சேனநாயக்க கூறுகிறார்



(பொலநறுவை)


அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையல்லாது, அவர் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையான விசாரணையொன்று அவசியமென, ஐக்கிய தேசியக் கட்சியின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க தெரிவித்தார்.

பொலநறுவை வெலிகந்த பகுதியில், இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் மீதான குற்றச்சாட்டு தொடர்பில் முறையான விசாரணைகளின்றி, நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்க முடியாத நிலையில் தாம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அமைச்சர் றிசாத்துக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் உள்ளன. அவற்றுக்கு முறையான விசாரணை இடம்பெற வேண்டும். அப்போதே, எமக்குச் சரியான தீர்மானத்தை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# மகனின் விடுதலையை வேண்டி வழிபாடுகளில் ஈடுபட்ட தாய்



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு, பொதுமன்னிப்பளித்து அதற்கான ஆவணத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முன்தினம் மாலை கையொப்பமிட்டுள்ள நிலையில், ஞானசார தேரருக்காக அவரது தாயார், கொழும்புக்கு வருகை தந்து அவரது விடுதலைக்காக, விசேட வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

கலகொட பிரதேசத்திலிருந்து கொழும்புக்கு வருகைதந்த ஞானசார தேரரின் தாய் கொழும்பிலுள்ள பிக்குகளுடன் இணைந்து விசேட பூஜை வழிபாடுகளில் நேற்று ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.எய்ட் நண்பர்களின் அனுசரணையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பத்தாவது ஆண்டு நினைவு தினத்தில் முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், பொதுமக்கள் எனப் பலருக்கும் பலவித உதவிகளை வழங்கியுள்ளனர். 12 குடும்பங்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா கல்விக்கான புலமைப் பரிசாகவும் இரண்டு கண்கள் பார்வை இழந்தும் கால் ஒன்றை இழந்தவருக்கு இரண்டு பசு மாடுகளும் கடுமையான காயத்துடன் வாழ்பவருக்கு மீன் வியாபாரத்திற்கான மோட்டார் சைக்கிள் என பலதரப்பட்ட உதவிகளை வழங்கியுள்ளனர்.

# அமைச்சர் றிசாத்தை சிறைக்கு அனுப்பவும் தயங்கப் போவதில்லை

## ஆளும் கட்சி எம்.பி

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மையென நிரூபிக்கப்படுமானால் அவரை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவது மட்டுமன்றி சிறைக்கு அனுப்பவும் தயங்க மாட்டோம் என ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இந்நிலையில், அமைச்சர் றிசாத் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே சிறந்த வழி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக 10 குற்றச்சாட்டுக்களை முன் வைத்து கூட்டு எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை



கொண்டு வந்துள்ளனர்.

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை குறித்து நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கடும் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்த நிலையில், அமைச்சர் றிசாத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஆராய விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 758 இளம் தொழில் முனைவோருக்கு ரூ.31 கோடியே 29 இலட்சம் கடனுதவி

(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர இளம் தொழில் முனைவோரை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "என்ரபிறைஸ் ஶ்ரீலங்கா - இலங்கை வங்கியின் துறுணு திரிய" கடன் திட்டத்தின் கீழ் இதுவரை வெற்றிகரமாக 758 வரையான இளம் தொழில்முனைவோருக்கு 31 கோடியே 29 இலட்சத்து 84 ஆயிரத்து 628 ரூபா பெறுமதியான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இலங்கை வங்கியால் வெளியிடப்பட்ட வாராந்த முன்னேற்ற அறிக்கையிலேயே இத்தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

"துறுணு திரிய" கடன் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களிலும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதோடு, மாகாண ரீதியான கடன் வழங்கலில் சப்ரகமுவ மாகாணம் 147 கடன்களை வழங்கி முன்னிலை வகிக்கின்ற அதேவேளை இரத்தினபுரி மாவட்டம் 117 கடன்களை வழங்கி மாவட்ட ரீதியில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கடன் பெற்றவர்களில் 61% ஆனோர் பெண்களாவர். மேலும் நாடளாவிய ரீதியில் பல தொழில் முனைவோர் அழகுக் கலை, ஆடைக்கைத்தொழில், தோட்டத் தொழில் போன்ற துறைகளிலேயே "துறுணு திரிய" கடன் திட்டத்தின் கீழ் பயன் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை வங்கியானது, பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் (PDO), தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மத்திய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவப் பிரிவு (CPMU) மற்றும் சிறிய முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரிவு (SEDD) என்பவற்றுடன் இணைந்து இளம்தொழில்முனைவோருக்கு நிதி உதவியினை வழங்குவதற்காக "துறுணு திரிய" கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இலங்கை வங்கியின் "துறுணு திரிய" கடன் திட்டத்தின் கீழ், 3 வருடங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற பட்டதாரிகள் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க தொழில்சார் தகைமைகளைக் கொண்ட 40 வயதிற்குட்பட்ட தொழில் முனைவோருக்கு உத்தரவாதமற்ற மற்றும் பிணைகளற்ற/ இலகுபடுத்தப்பட்ட பிணை நிபந்தனைகளின் கீழ் கடன்கள் வழங்கப்படுகின்றன.

இக்கடன்திட்டம் தொடர்பான மேலதிக தகவல்களை நாடு தழுவிய ரீதியில் இலங்கை வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் மற்றும் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மன்னன் சங்கிலியன் 400ஆவது ஆண்டு நினைவு நாள் அழைப்பு

**நிகழ்வு 1:**
யமுனை ஏரியில் யமுனை ஆற்று நீர், காவிரி ஆற்று நீர் கலத்தல்
**இடம்:** சங்கிலியன் இராசதானி, நல்லூர்
**நாள்:** ஞாயிறு 26.05.2019
**நேரம்:** காலை 09.30 மணி
முன்னிலை: மேதகு இந்தியத் துணைத் தூதர் திரு. எசு. பாலசந்திரன் அவர்கள்
பங்கேற்பு: தில்லியில் இருந்து யமுனை ஆற்று நீர், கோயம்புத்தூர், கும்பகோணம் நகரங்களில் இருந்து காவிரி ஆற்று நீர் கொணர்ந்த வேத விற்பன்னர் எழுவர்



**நிகழ்வு 2:**
தருப்பணம், தானம்
**இடம்:** கீரிமலை தருப்பண மடம்
**நாள்:** திங்கள் 27.05.2019
**நேரம்:** காலை 09.00 மணி
முன்னிலை: மேதகு ஆளுநர் முனைவர் சுரேன் இராகவன் அவர்கள்
**பங்கேற்பு:** தில்லி, கோயம்புத்தூர், கும்பகோணம் நகரங்களில் இருந்து வந்துள்ள வேத விற்பன்னர் எழுவர்

**பிற நிகழ்வுகள்:** திங்கள் 27.05.2019 காலை 09.00 மணிக்குப் பின்வரும் 11 நீர்நிலைகளில் தருப்பணம், தானம், அன்னதானம்

- கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவகங்கை தொடர்பு: சிவத்திரு.அமிர்தசிறீக்காந்தராசக் குருக்கள் **+94779590199**
- கிளிநொச்சி, செல்வா நகர்,கந்தன் குளம், ஓம் சக்திவேல் கோயில் தொடர்பு: சிவத்திரு கயிலாயநாதன் ஐயர், **+94776337017**
- வவுனியா, கல்லாறு கற்குளம் தொடர்பு: மாதவன் அ **+94778351401**
- முல்லைத்தீவு, நந்திக்கடல் தொடர்பு: யோகதாசன் நிமலன் **+94777204554**
- மன்னார், திருக்கேதீச்சரம்,பாலாவி தொடர்பு:இராசகுமாரன் **+94717565073**
- அநுராதபுரம், தேவநம்பியதீச வாவி தொடர்பு: சிறீகாந்தன் பா **+94775105936**
- திருகோணமலை, கன்னியா வெந்நீரூற்று தொடர்பு: பிரணவசோதி செ **+94772446801**
- நுவரெலியா, அடிவார அருவி, சிவனொளி பாதமலை தொடர்பு: சிவத்திரு சிவசுப்பிரமணிய ஐயர் சி **+94718462406**
- அட்டன் அருள்மிகு துர்க்கை அம்மன் கோயில், தொடர்பு:வேலுசுரேசர் **+94771832453**
- அம்பாந்தோட்டை,கதிரமலைக் கந்தன் சிவன்கோயில் தொடர்பு: சுரேசுக்குமார் க **+94754508687**
- அம்பாறை, அருள்மிகு சித்திரவேலாயுதர் கோயில் கடல் தொடர்பு: திருமாறன் சி **+94775500322**
- வதுளை, அருள்மிகு சித்திவிநாயகர் கோயிலருகே ஆறு தொடர்பு: நாகேசுவரன் சி **+94770833831**
- புத்தளம், ஆண்டிமுனை அருள்மிகு மாரியம்மன் கோயில் தொடர்பு: வீரசொக்கன் **+94714411607**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**
**மன்னன் சங்கிலியன் நினைவுநாள் குழு தலைவர்: பாலசிங்கம் பாலகணேசன் +94 718457236**
**செயலாளர்: என். பி. ஸ்ரீந்திரன் +94779603001, பொருளாளர்: வை. மோகன் +94779236552**
(8904)

தொடர் குண்டுத் தாக்குதல்கள்

## எப்.பி.ஐ. உள்ளிட்ட ஒன்பது சர்வதேச சிறப்பு விசாரணை குழுக்கள் இலங்கையில்

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தொடர் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தற் போது முன்னெடுக்கப்படும் சி.ஐ.டி. விசாரணைகளுக்கு 9 சர்வதேச சிறப்பு விசாரணை நிறுவனங்கள் உதவிக்கு வருவதாகவும்அவர்களது குழுவினர் இங்கிருந்தவாறு இந்த உதவி ஒத்தாசைகளை முன்னெடுப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சி.ஐ.டியின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்னவின் கீழ் 15 குழுக்கள் முன்னெடுக்கும் சிறப்பு விசாரணைகளுக்கு இந்த 9 வெளிநாட்டு விசாரணை நிறுவனங்களும் தொழில் நுட்ப ரீதியாகவும் ஏனைய உதவிகளையும் வழங்குவதாகவும்அவர் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் இவ்வாறு இலங்கை விசாரணையாளர்களுடன் களத்தில் உள்ள வெளிநாட்டு விசாரணை நிறுவனங்களில் எப்.பி.ஐ., ஸ்கொட்லன்ட் யார்ட், அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் மற்றும் நியூசிலாந்து ஆகிய சிறப்பு விசாரணையாளர்கள் இணைந்து செயற்படுவதாக பொலிஸ் தலைமையகத் தின் உயர் அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார்.

இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸாருடன் இலங்கை மிக நெருக்கமாகச் செயற்படுவதாகவும் பயங்கரவாதிகளின் சர்வதேச வலையமைப்பு குறித்த தகவல்களைப் பரிமாற இன்டர்போலுடன் இணைந்ததாக 24 மணி நேர நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சைபர் தாக்குதலுக்கு வெளிநாட்டைச் சேர்ந்த 2 குழுக்களே காரணம் லால் டயஸ் தகவல்

இலங்கை இணையத் தளங்கள் மீது இடம்பெற்ற சைபர் தாக்குதல் வெளி நாட்டைச் சேர்ந்த இரு குழுக்களால் நடத்தப்பட்டதாக கணனி அவசர நடவடிக்கை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இணையத்தளங்கள் மீது இடம்பெற்ற சைபர் தாக்குதல் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவ் வொன்றியத்தின் நிறைவேற்று அதிகாரி லால் டயஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் கடந்த 18 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்கு தல் ஒரு குழுவினாலும் 19 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதல் மற்றுமொரு வெளி நாட்டுக் குழுவினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சைபர் தாக்குதல் இடம் பெறுவதற்கு வாய்ப்புள்ளதாக ஏற்கனவே தகவல்கள் கிடைத்தமையால்அதற்கான முன்னேற்பாடுகளை நாம் மேற்கொண்டிருந்தோம்.

ஆகையால் தாக்குதலை நடத்தியவர்களுக்கு எவ்வித தரவுகளையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதேவேளை சைபர் தாக்குதலுக்குள்ளான இணையத் தளங்களில் 99 வீதமானவை வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் இணையத் தளங்களைப் பாதுகாப்பது குறித்து விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன" என லால் டயஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1967 RC<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா:36 ½செவ் 2 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, Germany<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/2746 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி<br>கி.பா: 23 ½செவ் 4 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: தரம் 10<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/5016 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 34 ¾<br>தகைமை/தொழில்: A/L,கடைஊழியர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/2750 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 43 ¾செவ் 1 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பல் மருத்துவர், India<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, Engineer, Accountantஉள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/5039 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 15சூரிசெவ் 11 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: AL,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/2754 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 16 ¾செவ் 2 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்.<br>*பெண் விவாகரத்தானவர்<br>தொ.இ: G/5050 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 66செவ் 4 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: AL,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: A/L,உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/2755 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 46செவ் 4 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA,ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் சொந்ததொழில்<br>தொ.இ: G/5055 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சொந்த நிலங்களை போராடிப்பெற்றதால் புறக்கணிக்கப்படுகிறோமோ? முள்ளிக்குளம் மற்றும் இரணைதீவு மக்கள் கேள்வி

## மீள்குடியேறி ஒருவருடம் கடந்தும் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் குற்றச்சாட்டு



போராட்டத்தின் மத்தியில் மீள் குடியேறிய நாம் திட்டமிட்டு புறக் கணிக்கப்படுகிறோமா? என முள் ளிக்குளம் மற்றும் இரணைதீவு மக்கள் கேள்வியெழுப்பியுள் ளனர்.

முள்ளிக்குளம் மற்றும் இரணை தீவு பகுதியைச் சேர்ந்த மக்கள் கடல் சார்ந்த வாழ்வாதாரத்தை கொண்டிருந்தனர். நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலை காரண மாக இரு பிரதேச மக்களும் கடற் படையின் கட்டாயத்தின் பெயரில் வெளியேற்றப்பட்டு அருகில் உள்ள காட்டுப்பகுதிகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டனர்.

குறித்த இரு கடல் பகுதிகளும் அதிக கடல் வளங்களை கொண்ட பகுதிகளாகும்.கடல் அட்டை, கறுப்பு நண்டு, முருகைக் கற்பாறைகள், கடல்முத்துக்கள் என செழிப்பு மிக்க வளங்களை கொண்டு காணப்படும் நிலையில் குறித்த பகுதிகள் படை த்தரப்பால் விடுவிக்கப்படவில்லை.

எனவே கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி தங்களுடைய பூர்வீக நிலமான முள்ளிக்குளத்திற்குள் தங்களை மீள்குடியேற்றுமாறு கோரி முள்ளிக்குளத்தை பூர்வீக மாக கொண்ட மக்கள் கடற்படை முகாமுக்கு முன்பாக தொடர் போராட்டம் ஒன்றை மேற்கொ ண்டிருந்தனர். 38 நாள் தொடர் போராட்டத்தின் பின்னர் சொந்த முயற்சியில் அருகில் இருந்த காட்டுப்பகுதியான மலங்காடு எனும் பகுதியில் குடியேறினார் கள்.

அதேபோன்று 2017 ஆண்டு மே மாதம் முதலாம் திகதி கிளிநொச்சி இரணைதீவை பூர்வீகமாக கொண்ட மக்கள் தங்களுடைய பூர்வீக கிரா மத்தில் தங்களை மீள்குடியேற்றம் செய்யக்கோரி தொடர் போராட்ட த்தை மேற்கொண்டனர்.359 நாள் தொடர் போராட்டங்கள் நடத்தியும் இவர்களின் போரட்டத்தை அரசா ங்கம் கண்டு கொள்ளவில்லை. எனவே இப் போராட்டத்தில் ஈடு பட்ட மக்கள் அரச அனுமதி இன்றி 100 இற்கு மேற்பட்ட படகுகளில் 500 இற்கு மேற்பட்ட மக்கள் தங் கள் சொந்த முயற்சியில் இரணை தீவில் காடுகளை துப்புரவு செய்து இரணை மாத நகர் பகுதியில் தற் காலிகமாக குடியேறியுள்ளனர்.

இரு பிரதேச மக்களும் மீள் குடியேறி ஒரு வருடம் ஆகியும் அரசாங்கத்தினாலோ அரச அதி காரிக ளினாலோ மீள்குடியேற் றம் தொடர்பாக எந்த நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படவில்லை. இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

தற்காலிக வாழிடங்களை கூட அமைக்க முடியாமல் குடிப்ப தற்கு சுத்தமான நீர் இல்லாமல், சுகாதார வசதிகள் இல்லாமல், மின்சார வசதி இல்லாமல் அகதி முகாம்களில் வாழ்ந்த அதே வாழ்க்கையை எமது மூதாதை யர் வாழ்ந்த நிலத்தில் வாழ்கின் றோம் என்ற ஒரே சந்தோசத்தில் ஏற்று வாழ்கிறோம்.

ஏனைய இன மக்களுக்கு நீண்டகால இடம் பெயர்ந்த மக் கள் எனும் அடிப்படையில் புதி தாக அமைச்சுக்களை உருவா க்கி துரித கதியில் மீள்குடியேற்ற வசதிகளை, வீட்டுத்திட்டங்களை விரைவாக வழங்கும் அரசாங் கம் போராட்டத்தின் மத்தியில் வாழ்வாதாரத்திற்காக சொந்த கிராமங்களுக்கு வந்த எம்மை மாற்றான் நிலையில் நோக்குவது எந்த விதத்தில் ஏற்புடையது?

தொடர்ந்தும் சொந்த மண் ணில் வாழ வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் பல்வேறு துன்பங் களை சகித்து போராடிய நாம் தற்போது அகிம்சை வழியில் போராடுகிறோம். இன்னல்க ளுடன் வாழும் எமக்கு இயல்பு நிலை எப்போதுவரும் என்ற ஏக்கத்துடனே எதிர்பார்க்கிறோம்.

போராடி பெற்றாலும் எங்கள் நிலங்களை தான் நாங்கள் பெற் றோம். நாங்களும் இந்த நாட்டி னுடைய குடிமக்களே. எனவே எங்களுக்கு சொகுசு வாழ்க் கையோ ஆடம்பர வசதிகளோ வேண்டாம். நாங்கள் எமது பூர்வீக நிலத்தில் அடிப்படை வச திகளுடன் திருப்திகரமான ஒரு சாதாரண வாழ்க்கை வாழ்வதற் கான ஏற்பாட்டையாவது செய்து தருமாறும் இம் மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (9-285)




## கஞ்சாவுடன் இருவர் கைது

மதவாச்சி பகுதியில் 142.812 கிலோ கேரள கஞ்சாவுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்ப டையினர் மற்றும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக் கமைய மதவாச்சி பகுதியில் கார்ஒன் றினை சோதனைக்கு உட்படுத்திய போதே இவ்வாறு கஞ்சா மீட்கப்பட் டுள்ளது. இவை 66 பைகளில் பொதி செய்யப்பட்டிருந்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் அநுராதப்புரப்பகு தியை சேர்ந்த 48 மற்றும் 52 வயது டையவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசா ரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9)

## நீண்ட வரட்சிக்குப் பின்னர் முல்லையில் நேற்று மழை



கடும் வரட்சிக்கு மத்தியில் முல்லைத்தீவின் சில பகுதிகளில் நேற்று கடும் மழை பெய்துள்ளது. தொடர்ச்சியாக கடும் வரட்சி நிலவி வந்த நிலையில் மக்கள் மற்றும் கால்நடைகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியிருந்தன. இந்நிலை யில் நேற்று முல் லைத்தீவு மாவ ட்டத்தின் சில பகுதிகளில் ஓரளவு மழை பெய்வதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக ஒட்டுசுட்டான் மற்றும் புதுக்குடி யிருப்பு பகுதிகளில் நேற்று மழை பெய்வதை அவதானிக்கக் கூடிய தாக இருந்தது. (9-281)

# ஐவரின் வழக்குகளையேனும் விசாரியுங்கள் ஓ.எம்.பி. அலுவலகத்தை ஏற்கிறோம்

## காணாமல் போனோரின் உறவுகள்



காணாமலாக்கப்பட்ட தமது உறவுக ளில் ஐவரது வழக்குகளையேனும் விசாரி த்து அவர்களை கண்டுபிடித்து தரும் பட்சத்தில் தாம் காணாமலாக்கப்பட்டோருக் கான அலுவலகத்தை ஏற்றுக்கொள்வோ மென் காணாமலாக்கப்பட்டோரின் உறவி னர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் கொழும்பிற்கு விஜயம் செய்த காணாமலாக்கப்பட்டோரின் உறவி னர்கள் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் ஆணையாளரையும் அமைச்சர் மனோ கணேசனையும் சந்தி த்து கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த சந்திப்பு தொடர்பாக காணா மலாக்கப்பட்டோரின் வடக்கு-கிழக்கு மாவட்டங்களின் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணா மலாக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் ஆணையாளரையும் அமைச்சர் மனோ கணேசனையும் சந்தித்து கலந்துரையாடினோம்.

இதன்போது, காணாமலாக்கப்பட்டோ ருக்கான அலுவலகத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென தெரிவித்தோம்.

அத்தோடு காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை கண்டுபிடித்து தருவதை செயற்பாட்டின் மூலம் ஓ.எம்.பி அலுவ லகம் நிரூபித்தால் மாத்திரம் அதனை ஏற்றுக்கொள்வோமென தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

காணாமலாக்கப்பட்ட தமது உறவுக ளில் மாதிரியாக ஆதாரம் உள்ள ஐவரது வழக்குகளையேனும் விசாரணை செய்து முடிவுகளை அறிவிக்கும் பட்சத்தில் தாம் காணாமலாக்கப்பட்டோருக்கான அலு வலகத்தை ஏற்றுக்கொள்வோமென தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார். (9)



2019 க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேற்றினை அதிகரிப் பதற்கான வலய மட்ட அதிபர் மற்றும் கல்விசார் ஆளணியினருடனான சந்திப்பு வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலயங்களில் கடந்த செவ் வாய்க்கிழமை நடைபெற்றதுடன் நேற்று துணுக்காய் மற்றும் கிளிநொச்சி வலயங்களில் மாகாண பணிப்பாளர் உதயகுமார் தலைமையில் நடை பெற்றது.

## அந்தணர் ஒன்றியத்தின் கலை இலக்கியப்பெருவிழா

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன் றியம் நடத்தும் மாபெரும் கலை இலக்கியப் பெருவிழாவானது எதிர்வரும் ஞாயிற்று க்கிழமை வவுனியா சிந்தாமணிப் பிள்ளை யார் ஆலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

குறித்த நிகழ்வு 4.5 ஆம் திகதிகளில் கடந்த இரண்டுநாள் பெருவிழாவாக நடைபெற இருந்தபோதும் நாட்டின் அசா தாரண சூழ்நிலையினால் ஒருநாள் விழா வாக மாற்றியமைக்கப்பட்டு நடைபெறு கிறது.

இந்நிகழ்வில் கலை,கலாசார நிகழ்வு கள் இடம்பெறுவதுடன் வடக்கு மாகா ணத்தைச் சேர்ந்த பல்துறைசார்ந்த 50 குருமார்களும் வவுனியாவை சேர்ந்த ஊடகம், இலக்கியம், இசை, மருத்துவம், ஜோதிடம், பாரம்பரிய துறைசார்ந்தவர் என 30 பேரும் புலம்பெயர் தேசத்தினைச் சார்ந்த 38 பேரும் விருதுகளினை பெற் றுக் கொள்ளவுள்ளனர்.

எனவே இந்த விழாவில் குருமார்கள் ஆலய நிர்வாகிகள், இலக்கியவாதிகள், இசையாளர்கள்.மருத்துவர்கள், ஊடக வியலாளர்கள், கல்வியியலாளர்கள் என அனைவரும் கலந்து சிறப்பிக்கின்றனர். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (9-250)

## முறைகேட்டை எதிர்த்ததால் அச்சுறுத்தல்

வவுனியா நகரசபை தேசிய அரச பொது ஊழியர் சங்கத்தின் செயலாளரினால் வவுனியா நகரசபை சுகாதாரப்பகுதி தொழி லாளர் ஒருவருக்கு தொலைபேசி ஊடாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரப்பகுதியில் இடம்பெற்று வந்த தொடர்ச்சியான முறைகேடான நடவடிக் கைகளை சுட்டிக்காட்டி எதிர்த்ததன் கார ணமாகவே இக்கொலை அச்சுறுத்தலை தொலைபேசியூடாக தன்மீது மேற்கொண் டுள்ளதாகவும் இதற்கான உரையாடல் ஆதாரமும் தன்வசம் வைத்திருப்பதாகவும் நகரசபை சுகாதாரத் தொழிலாளி முறைப் பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். (9-250)

# கல்லாற்றுப் பகுதியில் வெடிபொருட்கள் மீட்பு

(பரந்தன்)

கிளிநொச்சி கல்லாற்றுப் பகுதியில் இருந்து வெடிபொருட்கள் இராணுவத்தினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

கல்லாற்றுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு அருகாமையில் சில வெடிபொருட்கள் இருக்கலாம் என இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த வீட்டை நேற்றுக் காலை சோதனை செய்த பொழுது வீட்டின் வேலிப் பகுதியில் கடதாசிப் பெட்டி ஒன்றினுள் இருந்து தமிழன் குண்டு என சொல்லப்படுகின்ற விடுதலைப்புலிகளின் தயாரிப்புக் குண்டு ஒன்றும் ஆர்.பி.ஜி குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குண்டை வெடிக்க வைப்பதற்கு தர்மபுரம் பொலிஸாரால் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் அனுமதி பெறப்பட்டு குண்டை வெடிக்க வைக்கும் பணியை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டனர்.

மேலும் குறித்த இரண்டு குண்டுகளும் பழையவை எனவும் இவற்றை இனம்தெரியாத நபர்கள் குறித்த இடத்தில் வைத்திருக்கலாம் என படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (9-312)

# முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்





(பரந்தன்)

புனர்வாழ்வு அதிகார சபையினால் 36 முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஒத்துழைப்பு மையத்தில் வைத்து நேற்று வழங்கி வைக்கப்பட்டன. கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 36 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வில் புனர்வாழ்வு நாயகம் மேஜர் ஜெனரல் ஜனக ரத்நாயக்க, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி படைகளின் கட்டளைஅதிகாரி மேஜர் ஜெனரல் ரவிபிரிய உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (9-312)

# முல்லைத்தீவில் இடம்பெற்ற வயல் விழாவும் சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பும்







(பனிக்கன்குளம்)

வயல் விழாவும் சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தின் பண்ணை முகாமையாளர் ஆ.அஜந்தனின் ஒழுங்குபடுத்தலில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பூ. உகநாதனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் விவசாய திணைக்களத்தினால் செய்கை பண்ணப்படுகின்ற விவசாய உற்பத்திகளை நவீன இயந்திரங்களின் மூலம் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பாகவும் வரட்சியின் போது பயிர்கள் பராமரிக்கும் முறை போன்றவை வயல் விழாவில் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. இதில் அதிகாரிகள், பொதுமக்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டு இதனை பார்வையிட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து விவசாய அமைச்சினால் விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

அதில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் சிறந்த வீட்டுத் தோட்ட செய்கையாளர்களுக்கான போட்டியில் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தை கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த க.பழனிநாதன், இரண்டாமிடத்தை ஹலம்பவெவ பகுதியை சேர்ந்த சுபரகுமி ரலகே பிரதீப குமுதினி, மூன்றாமிடத்தை விசுவமடு மேற்கைச் சேர்ந்த வீ. ஜெகதீஸ்வரி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த சேதனச் செய்கையாளர்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை கல்விளானை சேர்ந்த செ.துவாரகன், இரண்டாமிடத்தை வித்தியாபுரத்தை சேர்ந்த செ. தவச்செல்வி, மூன்றாமிடத்தை மல்லிகைதீவைச் சேர்ந்த ஜோ.அலெக்ஸ், ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மாகாண விவசாய அமைச்சின் மீண்டுவரும் செலவின தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சிறந்த நிலக்கடலை செய்கையாளர்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை கொக்குளாயை சேர்ந்த க. ஜெயராசா, இரண்டாமிடத்தை கற்சிலைமடுவைச் சேர்ந்த சி.தனுசீலன், மூன்றாமிடத்தை மூங்கிலாறு பகுதியை சேர்ந்தவரான ரா. ரகுநாதன், ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சிறந்த உயர் அடர்த்தி முறையிலான மாமரச் செய்கை போட்டியில் முதலாமிடத்தை பூதன்வயல் முள்ளியவளையைச் சேர்ந்த சு.சந்திரமோகன், இரண்டாமிடத்தை முத்துவிநாயகரபுரத்தைச் சேர்ந்த மா.யோகராசா, மூன்றாமிடத்தை இரண்டாம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ப.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இதில் முதலாமிடத்தை பெற்றவர்களுக்கு 15000 ரூபாவும் இரண்டாமிடத்தை பெற்றவர்களுக்கு 12500 ரூபாவும், மூன்றாமிடத்தை பெற்றவர்களுக்கு 10000 ரூபாவும் வழங்கப் பட்டதுடன் கேடயம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் மத்திய அரசினால் நடத்தப்பட்ட சிறந்த வர்த்தக ரீதியிலான பயிர்ச்செய்கை உற்பத்தி செய்கையில் வட மாகாணத்திலேயே மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்ட ஒலுமடுவை சேர்ந்த ச.சக்திவேலுக்கு வெற்றி சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியாக சிறந்த வீட்டுத்தோட்ட செய்கையாளர்கள் 57 பேருக்கும், சிறந்த சேதன செய்கையாளர்கள் 33 பேருக்கும் சிறந்த நிலக்கடலை செய்கையாளர்கள் 45 பேருக்கும் சிறந்த உயர் அடர்த்தி முறையிலான மாமரச் செய்கையாளர்கள் 32 பேருக்குமாக மொத்தமாக 167 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதோடு வட மாகாண விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார்,ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஷ், கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர், மாவட்ட விவசாய பணிப்பாளர், மாவட்ட விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாய போதனா ஆசிரியர்கள்,விவசாயிகள், வெற்றியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-281)




## கிளிநொச்சி மக்களுக்கு மின்னிணைப்பு எப்போது?

## டக்ளஸ் எம்.பி.கேள்வி

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு இதுவரை மின்னிணைப்புகள் வழங்கப்படாதிருப்பது ஏன் என பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதைய நிலையில் சுமார் 43 ஆயிரத்து 818 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன என்பதையும், இக் குடும்பங்களில் மீள் குடியேற்றத்திற்குப் பின்னர் 4 ஆயிரத்து 39 குடும்பங்களுக்கு இதுவரையில் மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

இதன் காரணமாக மேற்படி குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன. மேற்படி குடும்பங்களுக்கு மின்னிணைப்புகளை வழங்குவதற்கு துரிதமான நடவடிக்கையை எடுக்க முடியுமா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கேள்வி நேரத்தின்போது வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போதே மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வலு அமைச்சரிடம் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமாயின் எப்போது இதனை மேற்கொள்ள முடியும்? இல்லை எனில், அதற்கான காரணம் என்ன? என்பதை அவர் இந்தச் சபைக்கு அறிவிப்பாரா? இல்லையேல் ஏன்? என்றும் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (9)

## வற்றாப்பளை ஆலயத்தில் முன்னுதாரணமான செயற்பாடு

(பனிக்கன்குளம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவத்தை தொடர்ந்து ஆலய சுற்றுச்சூழல் உடனடியாகவே துப்புரவு செய்யப்பட்டிருப்பதை பொது மக்கள் வரவேற்றுள்ளனர்.

குறிப்பாக கடந்த ஆண்டு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் இடம்பெற்று மிக நீண்ட நாட்களாக அந்த ஆலய வளாகத்திலேயே குப்பைகள் அகற்றப்படாது இருந்தன. குறித்த விடயம் தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்ட பின்னர் அது படிப்படியாக சுத்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில் இம்முறை முன்னுதாரணமான ஒரு செயற்பாடாக முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியிலேயே கனடாவாழ் புலம்பெயர் உறவு ஒருவரால் நடத்தப்பட்டு வருகின்ற தனியார் நிறுவனமான அவலோன் நிஸோட் அண்ட்ஸ்பா நிறுவனம் இந்த ஆலய வளாகத்தை சுத்தப்படுத்தும் பணியை மேற்கொண்டது.

கடந்த வருடம் போன்று நந்திக்கடல் மாசுபடுவது அல்லது பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் ஆலய திருவிழா நிறைவு பெற்றதும் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றமையை பொது மக்கள் வரவேற்றுள்ளனர். (9-281)

# போயா தினத்தில் கள் விற்பனை

## கிளிநொச்சியில் 30 பேருக்கு எதிராக வழக்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வெசாக் போயா தினங்களின் போது சட்ட விரோதமான முறையில் கள் விற்பனையில் ஈடுபட்ட 30 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் கிளிநொச்சிமாவட்ட பொறுப்பதிகாரி த.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த போயா தினங்களின் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். மதுபானசாலை மற்றும் கள்ளுத்தவறணைகள் பூட்டப்பட்டிருந்த நிலையில் கிளிநொச்சி, பூநகரி மற்றும் பளை ஆகிய பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் கள் விற்பனை செய்த 30 பேர் கண்டு பிடிக்கப்பட்டனர். அதில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் இரண்டும் முற்றுகையிடப்பட்டு கசிப்பு மற்றும் உற்பத்திப் பொருட்கள் போன்றவை மதுவரித்திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த 30 பேருக்கும் எதிராக அடுத்த வாரம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9)

## பாரதம்

# ஆட்சியை தக்க வைத்துக்கொள்கிறது பா.ஜ.க



(டில்லி)

நடைபெற்று முடிவடைந்த 17ஆவது இந்திய பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி மொத்தமுள்ள 542 தொகுதிகளில் 323 தொகுதிகளுக்கு மேல் முன்னிலையில் இருக்கிறது.

இதனையடுத்து பாரதிய ஜனதா கட்சி தனது ஆட்சியை தக்க வைத்துக் கொள்கிறது.

17 ஆவது இந்திய மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெற்றது. இதன் வாக்கு எண்ணிக்கை நேற்றுக் காலை 8 மணிக்கு தொடங்கியது.

தொடங்கியது முதலே பாரதிய ஜனதா கட்சி தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறது.

ஆட்சி அமைப்பதற்கு தேவையான 272 தொகுதிகளில் பா.ஜ.க. மட்டுமே 283 தொகுதிகளில் முன்னிலை பெற்றிருக்கிறது. ஆட்சியமைப்பதற்கு தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று, மீண்டும் ஐந்தாண்டு காலத்திற்கு மத்தியில் ஆட்சியை அமைக்கிறது பாரதிய ஜனதா கட்சி. அக்கட்சியில் இடம்பெற்றுள்ள இதர கூட்டணி கட்சிகள் 50 தொகுதிகளுக்கு மேல் முன்னிலை பெற்று வருவதால், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியினர் உற்சாகமடைந்திருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரை வேலூர் தொகுதியை தவிர்த்து தேர்தல் நடைபெற்ற 38 தொகுதிகளில் 36 தொகுதிகளில் தி.மு.க. கூட்டணி முன்னிலை பெற்றிருக்கிறது. தர்மபுரி மற்றும் தேனி ஆகிய இரண்டு தொகுதிகளில் அ.தி.மு.க. கூட்டணி முன்னிலையில் இருக்கிறது.

தர்மபுரி தொகுதியில் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாசும், தேனி தொகுதியில் போட்டியிட்ட துணை முதல்வர் ஓ. பன்னீர் செல்வத்தின் மகன் ரவீந்திரநாத் குமாரும் முன்னிலையில் இருக்கின்றனர். புதுச்சேரி தொகுதியில் காங்கிரஸ் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய இணை அமைச்சராக இருந்த பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த பொன்.ராதாகிருஷ்ணன் அவர் போட்டியிட்ட கன்னியாகுமரி தொகுதியில் தொடர்ந்து பின்னடைவை சந்தித்து வருகிறார். அவரை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினரான வசந்தகுமார் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறார்.

தமிழகத்தில் இரண்டு கட்டங்களாக நடைபெற்ற 22 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணி தஞ்சாவூர், திருவாரூர், பெரம்பூர், பூந்தமல்லி, திருப் போரூர் உள்ளிட்ட 12 தொகுதியிலும், சூலூர், மானா மதுரை, அரூர் உள்ளிட்ட பத்து தொகுதிகளில் அ.தி.மு.க. கூட்டணியும் முன்னிலையில் இருந்து வருகிறது.

இந்த முன்னிலை நிலவரம் அ.தி.மு.கவினருக்கு உற்சாகத்தை அளித்திருக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு அறுதிப் பெரும்பான்மை பலம் பெறுவதற்கு 8 உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில் பத்து உறுப்பினர்கள் தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருவது அக்கட்சியினருக்கு உற்சாகத்தை அளித்திருக்கிறது.

அதேபோல் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய டி. டி. வி. தினகரன் தலைமையிலான அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், திரை நட்சத்திரம் கமல் ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மையம் ஆகிய இரண்டு கட்சிகளும் எந்த ஒரு அதிர்வையும் ஏற்படுத்தாமல் குறைவான வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

# உங்கள் மீது இந்தியா அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளது -சரத்குமார்



உங்கள் மீது இந்தியா அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளது என்று மீண்டும் இந்திய பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் டுவிட்டரில் பதிவிட்டிருப்பதாவது,

“வாழ்த்துக்கள் மோடி ஜி. இந்தியாவை சமூகரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முன்னேற்ற நீங்கள் முன்னெடுத்துள்ள ஆலோசனைகள் தேசம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உங்கள் மீது இந்தியா அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளது என்பதை அமோகமான இந்த முடிவுகள் எடுத்துரைக்கின்றன.

மேக் இன் இந்தியா, தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த ஸ்டார்ட் அப் இந்தியா, பெண்கள் மற்றும் பின்தங்கியவர்களுக்கு ஸ்டாண்ட் அப் இந்தியா, இது புதுமை, சுய நம்பிக்கை மற்றும் சமவாய்ப்பிற்கு வழிவகுக்கும்.

விரைவில் இது சாத்தியமாக நாம் அனைவரும் ஒற்றுமையாக இணைந்து நிற்போம்" என்று பதிவிட்டுள்ளார். (7)

# மத்திய கிழக்கிற்கு மேலதிக துருப்புகளை அனுப்புவது குறித்து பென்டகன் பரிசீலனை



(வோஷிங்டன்)

ஈரானுடன் நீடிக்கும் பதற்றத்திற்கு மத்தியில் மத்திய கிழக்கிற்கு மேலதிக துருப்புகளை அனுப்பும் அமெரிக்க இராணுவத்தின் கோரிக்கை தொடர்பாக பென்டகன் ஆராய்ந்து வருகிறது.

மத்திய கிழக்கிற்கு மேலும் 5 ஆயிரம் துருப்பு களை அனுப்புவதற்கு அமெரிக்க இராணுவம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்நிலையில், அது தொடர்பாக பென்டகன் ஆராய்ந்து வருவதாக அமெரிக்க அதிகாரிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை தெரிவித்தனர்.

ஆனால், அமெரிக்க இராணுவத் தின் இக்கோரிக்கைக்கு பென்டகன் ஒப்புதல் வழங்குமா என்பது சந்தேகத்திற்குரிய விடயம் என்றும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க இராணுவ உதவியை வலியுறுத்தி உலகம் முழுவதிலுமிருந்து பல கோரிக்கைகள் தொடர்ந்து பென்டகனுக்கு கிடைக்கப் பெற்று வருவதுடன், அது தொடர்ந்தும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியை பாதிப்படையச் செய்யும் வகையிலான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தீர்மானம் டெஹ்ரானுக்கும், வோஷிங்டனுக்கும் இடையிலான பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அணுஆயுத பயன்பாட்டிற்கான அபாயம்

## ஐ.நா.அறிவுறுத்து

(ஜெனிவா)

அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதற்கான அபாயம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் தற்போது உச்ச நிலையை அடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான உயர்மட்ட பாதுகாப்பு நிபுணர் நேற்று முன்தினம் எச்சரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் களைவு ஆராய்ச்சிக்கான நிறுவகத்தின் பணிப்பாளரான ரெனட்டா டவன் சுவிட்ஸர்லாந்தில் ஜெனிவா நகரில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையிலான தந்திரோபாய போட்டி காரணமாக ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அணு ஆயுதங்களைக் கொண்ட அனைத்து நாடுகளும் அணுசக்தி நவீனமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துள்ளதாக அவர் கூறினார்.

ஆயுதக் குழுக்கள், தனியார் துறைப் படைகள் மற்றும் பாதுகாப்புக்கும் மோதலுக்குமான புதிய தொழில்நுட்பங்கள் காரணமாக புதிய வகை போர் தொடர்பான அவசரகால நிலைமை தோன்றியுள்ளதால் பாரம்பரிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் இல்லாதொழிக்கப்பட்டு வருவதாக ரெனட்டா டவன் கூறினார்.

அணு ஆயுதங்களால் ஏற்படக்கூடிய அபாயத்தை நாம் அலட்சியம் செய்ய முடியாது எனத் தெரிவித்த அவர், இந்த அபாயம் தொடர்பில் எவ்வாறு செயற்பட்டு அதனை எவ்விதத்தில் முகாமை செய்வது என்பது தற்போது எழுந்துள்ள முக்கிய கேள்வியாகவுள்ளதாக தெரிவித்தார். (7)

# பயங்கரவாத செயல்கள 3 அறிஞர்களுக்கு மரண

(ரியாத்)

சவுதி அரேபியாவில் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 பிரபல அறிஞர்களுக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவர்களது மரண தண்டனை புனித ரம்ழான் பண்டிகை முடிந்த பின்னர் நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 3 பேருக்கு மரண தண்டனை நிறை வேற்றப்படவுள்ளது.

ஷேக் சல்மான் அல்–அவ்தாக், அவாத்

# இந்தோனேசிய ஜனாதிபதிக்கு எதிராக தொடரும் போராட்டம்-நூற்றுக்கணக்கானோர் பொலிஸாரால் கைது


இந்தோனேசிய ஜனாதிபதியாக மீண்டும் ஜொகோ விடோடோ தெரிவுசெய்யப்பட்டமையை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் போராட்டம் நடைபெற்றது.

தலைநகர் ஜகார்த்தாவில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும், பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இதன்போது போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனையடுத்து பொலிஸார் போராட்டக்காரர்களை நோக்கி தண்ணீர் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகை தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனையடுத்து 257 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து பண உறைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், இந்த போராட்டமானது திட்டமிட்டு பணம் வழங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (7)

# தென்னாபிரிக்க ஜனாதிபதியாக ரமபோசா மீண்டும் தெரிவு



(கேப் டவுன்)

தென்னாபிரிக்க நாட்டின் ஜனாதிபதியாக சிரில் ரமபோசாவை பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மீண்டும் தெரிவு செய்தனர்.

தென்னாபிரிக்க குடியரசு நாட்டின் பாராளுமன்றத்துக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அதிக இடங்களில் வெற்றி பெற்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் ஜனாதிபதியாக சிரில் ரமபோசாவை பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மீண்டும் தேர்வு செய்தனர்.

ஜனாதிபதி பதவிக்கு சிரில் ரமபோசாவை தவிர வேறு யாரும் நிறுத்தப்படாத நிலையில் ஆளும்கட்சி உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவுடன் சிரில் ரமபோசா வெற்றிபெற்றதாக இந்த தேர்தலை மேற்பார்வையிட்ட உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மோகோயெங் அறிவித்துள்ளார். (7)

# அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு ஈரான் ஒருபோதும் அடிபணியாது

## ஹசன் ரவுகானி திட்டவட்டம்

(டெஹ்ரான்)

அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு ஈரான் ஒருபோதும் அடிபணியாது என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி உறுதிபடத் தெரி வித்துள்ளார்.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து, அமெரிக்கா விலகியது முதல் இருநாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டு, கடும் மோதல் போக்கு நீடித்து வருகிறது.

ஈரான் மீது தொடர்ந்து பொருளாதார தடைகளை விதித்து வரும் அமெரிக்கா, மத்திய கிழக்கு பகுதியில் போர்க்கப்பல், போர் விமானம் மற்றும் ராணுவ தளபாடங்களை குவித்து வருகிறது. இதனால் இருநாடுகள் இடையே போர் பதற்றம் நிலவுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு ஈரான் ஒருபோதும் அடிபணியாது என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவுகானி உறுதிபடத் தெரிவித்துள்ளார். அசர்பைஜான் மாகாணத்தின் அரசு தொலைக்காட்சியில் நேரலையில் தோன்றி மக்களிடம் உரையாற்றியபோது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.



இதுபற்றி அவர் மேலும் கூறுகையில், "ஈரானின் உறுதியான வளர்ச்சியை சிதைத்து விடலாம் என்பது எதிரிகளின் மாயை ஆகும். பொருளாதார தடைகளால் உருவாகி இருக்கும் நெருக்கடியான சூழ்நிலையிலும் ஈரான் நிலையான வளர்ச்சியை நோக்கி பயணிக்கிறது.

இது அமெரிக்காவுக்கு நாம் தெரிவிக்கும் தீர்க்கமான பதில் ஆகும். அந்நாட்டின் எவ்வித அழுத்தங்களுக்கும் ஈரான் ஒருபோதும் அடிபணியாது" என தெரிவித்தார். (7)

# வடகொரிய கப்பலை கைப்பற்றி வைத்துள்ளமை இரு தரப்பு உறவுகளில் விரிசலை ஏற்படுத்தும்


## வடகொரிய தூதுவர் கிம்சோங் எச்சரிக்கை

(பியொங்யாங்)

அமெரிக்கா வடகொரிய சரக்குக் கப்பலை மூர்க்கத்தனமான முறையில் கைப்பற்றி வைத்துள்ளமை அமெரிக்க மற்றும் வடகொரிய உறவுகளின் எதிர்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என ஐக்கிய நாடுகள் சபைக்கான வட கொரிய தூதுவர் கிம் சோங் எச்சரித்துள்ளார்.

அந்த சரக்குக் கப்பலை அமெரிக்கா உடனடியாக விடுவிக்க வேண்டும்என அவர் நேற்று ஊடகவியலாளர்கள் மாநாடொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையில் வலியுறுத்தினார்.

வட கொரியாவின் இரண்டாவது மிகப் பெரிய சரக்குக் கப்பலான வைஸ் ஹொனெஸ்ட் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பெருமளவு நிலக்கரியை ஏற்றிச் சென்ற வேளை இந்தோனேசியாவால் முதலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.



இந்நிலையில் அந்தக் கப்பல் ஐக்கிய நாடுகள் தடையை மீறி நிலக்கரியை ஏற்றிச் சென்றதால் அதனைக் கைப்பற்றியுள்ளதாக அமெரிக்கா கடந்த 9 ஆம் திகதி அறிவித்திருந்தது.

வட கொரியாவுடனான உறவுகள் தொடர்பில் மென்மையான போக்கு கடைப்பிடிக்கப்படும் தருணத்தில் இத்தகைய நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

சரக்குக் கப்பல் கைப்பற்றப்பட்டது முதற்கொண்டு அமெரிக்காவின் ஒவ்வொரு நகர்வையும் வடகொரியா உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அந்தக் கப்பலை கைப்பற்றும் நடவடிக்கை வடகொரியா மீது ஆகக் கூடிய அழுத்தத்தைப் பிரயோகித்து அந்த நாட்டை மண்டியிடச் செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்கா தனது மூர்க்கத்தனமான செயற்பாடுகள் எதிர்கால முன்னேற்றத்தில் ஏற்படுத்தக் கூடிய விளைவுகள் குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அந்த சரக்குக் கப்பலை கைப்பற்றியுள்ளமை வடகொரியாவுக்கு எதிரான அமெரிக்காவின் தீவிர விரோத மனப்பான்மையின் வெளிப்பாடொன்றாக உள்ளதாகவும் தெரிவித்தார். (7)

# ...ளில் ஈடுபட்ட ...ன தண்டனை

அல்-குயார்னி மற்றும் அலி அல்-ஒமாரி ஆகிய 3 பேரும் அந்த நாட்டில் பிரபல அறிஞர்களாக கருதப்படுகின்றனர்.

இவர்கள் பல்வேறு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாக கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (7)

# அமெரிக்க வாழ் இலங்கையர்களால் பாதுகாப்புக் கருவிகள் வழங்கல்

(கொழும்பு)

தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதுகாப்புத் தேவையைக் கருத்திற்கொண்டு அமெரிக்க வாழ் இலங்கையர்களால் இராணுவப் பதவி நிலைப் பிரதானியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் வேண்டுகோளுக்கிணங்க 20 ஆயுதங்களை கண்டறியும் கருவிகள் இலங்கை இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன.



மேலும் இக் கருவிகளை மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தலைமையகத்தில் இராணுவத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை சந்தித்து வழங்கினார்.

மேலும் தேவைக்குரிய அதிநவீன கருவிகள் பதவிநிலைப் பிரதானியவர்கள் 2010-2015 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தூதுவராகவும் மற்றும் அமெரிக்காவின் இலங்கைக்கான பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக காணப்பட்ட வேளை நன்கொடையாளர் மற்றும் இவரிடையேயான நல்லிணக்கத்தின் காரணமாக வழக்கப்பட்டுள்ளன.

மேலும் நாட்டின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பதவி நிலைப் பிரதானியவர்களுக்கு நாடளாவிய ரீதியில் காணப்படும் இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளன. (இ-7)

# உண்மையான குற்றவாளிகளை மறைக்கவே அமைச்சர் றிசாத்துக்கு எதிராகப் பிரேரணை




## முஜிபுர் எம்.பி.சாடல்

(கொழும்பு)

உண்மையான குற்றவாளிகளை மறைக்கவே எதிர்க்கட்சியினர் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக சில குற்றச்சாட்டுக்களை தெரிவித்து எதிர்க்கட்சி கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் விசாரிக்கப்பட வேண்டும். அப்போதுதான் குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அதனை நிரூபிக்க முடியும்.

உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகளை மறைக்கவே எதிர்க்கட்சி றிசாத் பதியுதீனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கின்றது. இதற்கு இடமளிக்க முடியாது. அதனால் தெரிவுக் குழுவில் இது தொடர்பாக ஆராய்ந்து உண்மையான குற்றவாளிகளை இனங்காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் கூடியது. இதன் போது பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், எதிர்க்கட்சி உறுப்பினர்களால் அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தெரிவுக்குழு அமைத்து விசாரிப்பது தொடர்பில் எழுந்த சர்ச்சையில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இராணுவத்தில் 10 புதிய மேஜர் ஜெனரல்கள்



(கொழும்பு)

இராணுவத்தைச் சேர்ந்த 10 பிரிகேடியர் தர அதிகாரிகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால், மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பிரிகேடியர் கே.எம்.ஆர்.பி. கருணாதிலக, பிரிகேடியர் ஐ.ஓ. டபிள்யூ. மடோல, பிரிகேடியர், பி.ஜே.கமகே, பிரிகேடியர் எச்.பி.என்.கே.ஜெயபத்திரன, பிரிகேடியர் ஆர்.கே.பி.எஸ்.கெற்றகும்புர, பிரிகேடியர் ஏ.எஸ். ஆரியசிங்க, பிரிகேடியர் டபிள்யூ.டி.சி.கே.கோஸ்தா, பிரிகேடியர் பி.ஐ.பத்திரன, பிரிகேடியர் ஜி.எச்.ஏ.எஸ்.பண்டார, பிரிகேடியர் பி.பி.எஸ்.டி.சில்வா ஆகிய அதிகாரிகளே பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

2019 மே 10 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இவர்களுக்கு மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் இராணுவத்தின் மூத்த அதிகாரிகளான மேஜர் ஜெனரல்கள் பலர் ஓய்வு பெற்றுள்ள நிலையிலேயே புதிதாக 10 மேஜர் ஜெனரல்கள் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காது

சத்தம் இல்லாமல் மனிதனைக் கொல்லக் கூடியது எது? என்று கேட்டார் ஒருவர். எனக்குத் தெரியவில்லை. நீங்களே சொல்லுங்கள் என்றார் இன்னொருவர்.

மனிதனை சத்தமில்லாமல் கொல்லக் கூடியது சத்தம் தான்! என்றார். கேட்டவருக்கு மிகவும் ஆச்சரியம். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. தொடர்ந்து....சத்தத்திற்கு மத்தியிலே நாம் இருந்து கொண்டால் கொஞ்சம் கொஞ்சமாக காது கேட்காமல் போய் விடும். அதுமட்டுமல்ல வேற சில பாதிப்புக்களும் வந்து விடும். இதயத்துடிப்பு அதிகரிக்கும். இரத்தக் கொதிப்பு அதிகரிக்கும்.

ஒவ்வாமை வரும். நரம்புத்தளர்ச்சி உண்டாகும். ஆனால் உண்மையான ஓய்வு என்பது அது இல்லை. நிறைய வேலை செய்கின்ற ஜப்பான்காரர்கள் இப்படித்தான் ஓய்வு எடுக்கின்றார்கள்.

இதற்கு உபயோகப்படுத்துவதற்காகவே Silence என்று பல அறைகள் கட்டி வைத்திருக்கின்றார்கள். உள்ளே போய்விட்டால் ஒரு சத்தமும் கேட்காது. அவர்களெல்லாம் Silence room கட்டுகின்றார்கள். நாம் எல்லாம் Room இல் Silence Please என்று எழுதி வைக்கின்றோம். நம்முள் பல பேர் சத்தத்திற்கு மத்தியிலே இருக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அவர்களின் காதை காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி உண்டா? உண்டு.

இந்திய விஞ்ஞானிகள் இதற்கு ஒரு வழி கண்டுபிடித்திருக்கின்றார்கள்! (Defence Institute of Physiology and Allied Science-DIPAS New Delhi) அதாவது, வாயுவை சுவாசித்தால் காது கேட்காமல் போவதை தவிர்த்து விடலாமாம். வாயு என்றால் என்ன? பிராணவாயு 95%, கரியமிலவாயு 5% இது இரண்டும் சேர்ந்த கலவை தான்.

சத்தம் அதிகமாக உள்ள இடங்களில் வேலை செய்கின்றவர்கள் வேலைக்குப் போவதற்கு முன்னாடியோ– பின்னாடியோ சிறிது நேரம் இந்தக் கலவையை சுவாசித்தால் போதும். காதிற்கு கெடுதல் ஒன்றும் வராது. அதுசரி... மனித உடம்பில் தான் எது போனாலும் செயற்கையாக அதை பொருத்திக் கொள்ளுகின்ற வசதி எல்லாம் வந்து விட்டதே. அதேபோன்று செயற்கையாக காது செய்து வைத்துக் கொண்டால் என்ன? அதுவும் செய்யலாம். பிறவியிலேயே காது கேட்காயல் போனவர்கள் எல்லாம் இப்படி செயற்கை காது வைத்துக் கொள்ளலாம்.

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் இதை கண்டுபிடித்திருக்கின்றார்கள். நம்முடைய காதிற்குள் காக்லியா என்ற ஒரு பகுதி உண்டு. நத்தை ஓடு போன்று இருக்கும். அதற்குள் 10,000 இற்கும் மேல் Haircells இருக்கின்றது. இதெல்லாம் என்ன செய்கின்றது என்றால் ஒலி அலைகளை – electrical signal ஆக மாற்றுகின்றது. அந்த மின் அலைகள் நரம்புகளை தூண்டுகின்ற போது தான் நாம் சத்தத்தை கேட்கின்றோம்.

காது கேட்காதவர்களுக்கு என்ன செய்கின்றார்கள் என்றால் 22 சிறிய electrode இந்த haircell இற்குப் பதிலாக பொருத்தி விடுகின்றார்கள். அவ்வளவுதான் காது கேட்க ஆரம்பித்து விடும். இந்தக் கருவி என்ன செய்கின்றது என்றால் microphone ஒலி அலைகளை எடுத்து processor இற்கு செலுத்துகின்றது. இந்த processor வேற வேற frequency ஆக filter செய்து receiver ஒன்றுக்கு அனுப்புகின்றது.

இப்படி பிரித்து எடுக்கப்பட்ட frequency cochlea இல் பொருத்தப்பட்டிருக்கின்ற electrode களுக்கு அனுப்பி விடுகின்றது. ஆகக்கூடியும் நல்லா கேட்க ஆரம்பித்து விடுகின்றது.

ஒருவர் காதை காப்பாற்ற வேண்டும் என்பதில் மிகவும் அக்கறை உள்ளவர். இருந்தாலும் சத்தம் அதிகமாக உள்ள ஒரு தொழிற்சாலையிலே அவர் மனேஜர். வேற வழியில்லாமல் போய் வந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் வேலை முடிந்து ஒரு டவுன் பஸ் மூலமாக வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தார். இவர் பக்கத்திலே உட்கார்ந்திருந்தவர் ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே வந்தார். இவருக்கு அவர் பேசுவது சுத்தமாக காதில் விழவில்லை. மிகவும் பயந்து போய் விட்டார். இருந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் அவர் கூறியதற்கெல்லாம் தலையை ஆட்டிக் கொண்டே வந்தார்.

கடைசியாக பஸ் வந்து நின்றது. இவர் இறங்கினார். அவரும் இறங்கினார். இவர் அவரிடம் தன்னுடைய குறையை காட்டிக் கொள்ளாமல் கௌரவமாக,சேர்! நீங்கள் என்னிடம் வழி நெடுக நிறைய பேசிக் கொண்டே வந்தீங்க. எல்லாமே மிகவும் அபூர்வமான விடயங்கள். மிகவும் நன்றி என்றார்.

இதற்கு அவர், நான் எங்கே சேர் உங்களிடம் பேசிக்கொண்டு வந்தேன்? வாயிலே சிவிங்கம் வைத்து அசை போட்டுக் கொண்டு வந்தேன்! என்றார்.

# 4000 பௌத்த தாய்மார்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு

## திவயின பத்திரிகை செய்தி தொடர்பில் விசாரணை நடத்த ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

திவயின பத்திரிகையில் வெளியாகியிருந்த "பௌத்த தாய்மார்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு" தொடர்பான செய்தியின் உண்மைத் தன்மை குறித்து விசாரிக்கவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி நேற்று பாராளுமன்றில் வலியுறுத்தியுள்ளது.

தௌஹீத் ஜமாத் அமைப்பைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர், சுமார் 4000 பௌத்த தாய்மார்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்துள்ளதாக திவயின பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை குறித்த செய்தி தொடர்பில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைத் தொடர்புகொண்டு விபரம் கேட்டதாகவும், அவ்வாறு எந்தவொரு தகவலும் கிடைக்கப்பெறவில்லை எனக் கூறியதாகவும் சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.


அத்துடன் குறித்த செய்தி தொடர்பான உண்மைத் தன்மையை இன்று பாராளுமன்றில் முன்வைக்குமாறும் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## "பயங்கரவாதியாக இருந்து விடக்கூடாது"

# றிசாத் இராஜினாமா செய்ய வேண்டும்

## அதாவுல்லா வலியுறுத்து





(கொழும்பு)

சிங்கள மக்களும் சிங்கள அரசியல்வாதிகளும் சந்தேகத்துடன் நோக்குகிறார்கள் என்றால் உடனடியாக அந்த அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்துவிட்டு வெளியேறவேண்டும். அமைச்சுப் பதவிக்குப் பின்னால் கட்டுப்பட்டுக்கொண்டு முஸ்லிம்களை காட்டிக்கொடுக்கிறவர்களாக நாம் ஒருபோதும் இருக்கக்கூடாது என்று தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும், முன்னாள் அமைச்சருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் சமூகத்துக்காக பாராளுமன்றத்திலும், ஏனைய இடங்களிலும் அமைச்சர் றிசாத் குரல்கொடுப்பதனால் தான் இவ்வளவு பிரச்சினை அவருக்கு வந்துள்ளதாக அவரின் ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். அப்படியென்றால் கபீர் ஹாசிம் போன்ற இன்னும் எத்தனையோ முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏன் இப்படியான பிரச்சினை வரவில்லை. இவருக்கு மட்டும்தானா பிரச்சினைகள் எல்லாம் வரவேண்டும்.

பூனை இரு கண்களையும் மூடிக்கொண்டு உலகம் இருட்டியதாக சொல்வது போன்றே இருக்கிறது அமைச்சர் றிசாத்தின் கதை. அதுமாத்திரமல்லாமல் அந்த அமைச்சால் இப்ராஹிம் ஹாஜிக்கு பித்தளை கொடுத்த கதை போன்று இன்னும் இன்னும் எத்தனையோ கதைகள் வருகின்றன. இப்படி வருகின்ற நேரம் நாம் சுத்தமாக இருந்தால் அந்த அமைச்சுப் பதவியை தூக்கி வீசிவிட்டு வெளியேறவேண்டும்.

உடைக்கப்பட்ட பள்ளிவாசலில் ஒரே நாளில் மூன்று அஸர் தொழுகையை தொழுதால் மட்டும் மறைந்த தலைவர் மாமனிதர் அஷ்ரப் போன்று ஆகிவிடலாம் என்ற நினைப்பில் தொழுதது மட்டுமே அவருக்கு மிச்சம். வேறு ஒன்றுமில்லை. ஒரு ஜனாதிபதி தேர்தலுக்கு அவர் செய்த அநியாயங்கள் அவர்களுக்கே இப்போது திரும்பி வந்துள்ளது. இதை எண்ணி அரசியல்வாதிகள் அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். இன்னும் மூன்று அல்லது நான்கு மாதங்கள் மட்டுமே உள்ள அரசாங்கத்துக்கு மிகப்பெரிய படங்களை காட்டவேண்டாம். உன்னை சுற்றியே எல்லாம் நடக்கிறது. அவற்றையெல்லாம் விளங்கப்படுத்த வேண்டிய இடத்தில் விளங்கப்படுத்த வேண்டும் என அமைச்சர் றிசாத் பதியுதீனை வேண்டிக்கொள்ள விரும்புகின்றேன்.

அவருடைய அமைச்சு முஸ்லிம் சமூகத்துக்கு தேவையான அமைச்சா? அல்லது அரசியலில் அநாதைகளாக்கப்பட்டவர்களுக்கு தவிசாளர் பதவி கொடுப்பதற்கும், வியாபாரம் செய்வதற்குமான அமைச்சா? கடந்த காலத்தில் அவருடைய அமைச்சின் பிரிவு ஒன்றில் போதைவஸ்து கடத்தல் இடம்பெற்றது. அப்போது நான் அவரிடம் இந்த அமைச்சை ஏன் மீண்டும் மீண்டும் கேட்கிறாய், உன் பிரதேச மக்களின் அடிப்படை வசதிகளில் பாரிய பின்னடைவு இருக்கிறது. அதனை நிவர்த்தி செய்யும் அமைச்சை ஏன் பெறவில்லை. அதனால் தான் உன்னை கடத்தல்காரன் என அடையாளப்படுத்துகிறார்கள் என்றேன். இப்போது அவரை கூடவே பயங்கரவாதி என்கிறார்கள். நீ பயங்கரவாதியா ? இல்லையா? என்பதை இறைவன் அறிவான். அத்தனை குண்டுதாரிகளும் உன்னுள்ளேயே இருந்திருக்கிறார்கள். அவர்கள் கூறுவது போன்று பயங்கரவாதியாக நீ இருந்துவிடக்கூடாது உன்னை அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். செய்வதெல்லாம் செய்துவிட்டு ஒளிந்துகொள்ள முஸ்லிம் சமூகத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று றிசாத்தை நான் கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இது பௌத்த நாடு அல்ல மங்களவின் கருத்து சரியே

## அமில தேரர் ஆதரவு





(கொழும்பு)

இலங்கை ஒரு பௌத்த நாடு அல்லவெனவும் அது இலங்கையர்கள் அனைவருக்குமான நாடு எனவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்து உண்மையானது என பேராசிரியர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் முஸ்லிம், கத்தோலிக்கர், இந்து ஆகிய அனைவரும் அவசரமாக முன்னே வரவேண்டும். தங்களுக்குரிய அடையாளங்களை இல்லாதொழிப்பதற்கு இடமளிக்க வேண்டாம்.

மேலும் அமைச்சர் மங்கள சமரவீர இது பௌத்த நாடு அல்ல எனத் தெரிவித்துள்ளார். அவர் அந்த கருத்தை கூறிய நேரம் சரியில்லை என சிலர் கூறுகின்றனர். சரியாயின் ஒரு விடயத்தை அனைத்து நேரத்திலும் கூற முடியுமாக இருக்க வேண்டும் என பேராசிரியர் தம்பர அமில தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மருத்துவ ஆளணிப் பற்றாக்குறையை இலங்கையில் இல்லாமல் செய்யத்திட்டம்

## ஜெனிவாவில் அமைச்சர் ராஜித உறுதி



(ஜெனிவா)

எமது நாட்டில் வாழும் அனைத்து மக்களும் இலகுவாக சுகாதார சேவையைப் செலவின்றிப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார அமைச்சு குடும்ப வைத்தியர் முறையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஜெனிவா நகரில் ஆரம்பமாகி நடந்துவரும் உலக சுகாதார மாநாட்டில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொற்றா நோய்களை ஆரம்பத்திலேயே இனங்காண்பதற்கும் அவை ஏற்படாது தடுப்பதற்கும் என நாடளாவிய ரீதியில் 846 ஆரோக்கிய வாழ்வு நிலையங்கள் மற்றும் 906 சுகவனிதையர் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. புகையிலைக்கு விதிக்கப்பட்டுள்ள 90 வீத வரி மற்றும் விற்பனை சந்தைப்படுத்துதல் ஆகியவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடுமையான விதிகள் காரணமாக தற்போது 13 வீதமாகவுள்ள புகைபிடிப்போர் எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் குறையும்.

மேலும் உணவு மற்றும் பானங்களில் கலந்துள்ள சீனி, உப்பு மற்றும் திரிபடைந்த கொழுப்பு ஆகியவற்றின் அளவுகளை காட்டுவதற்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிறக்குறியீட்டு முறை குறித்தும் அமைச்சர் விளக்கினார்.


சிறுநீரக நோயாளர்களது நன்மை கருதி அந்த நோய்த் தாக்கம் அதிகமுள்ள பிரதேசங்களில் தற்போது செயற்பட்டுவரும் 600 குருதிச் சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை இவ்வருட இறுதிக்குள் 900 ஆக அதிகரிக்கவுள்ளதாக தெரிவித்த அமைச்சர் புதிதாக செயற்பட ஆரம்பித்துள்ள மூன்று புதிய மருத்துவ பீடங்கள் மற்றும் 2000 தாதியர்களைப் பயிற்றுவிக்கவல்ல புதிய தாதிய பீடம் ஆகியவற்றின் மூலம் நாட்டில் நிலவும் மருத்துவ ஆளணிப் பற்றாக்குறையை எதிர்காலத்தில் இல்லாது ஒழிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அணுகுண்டு - ஒரு வரலாற்றுப்பார்வை

எமது அன்றாட வேலைகளைச் செய்து முடிக்க நாம் பல்வேறு சக்தி முதல்களைப் பாவிக்கின்றோம். எரிபொருள்சக்தி, நீர்மின்சக்தி, அலைச் சக்தி, காற்றுச் சக்தி, சூரிய சக்தி அணுச் சக்தி என்பன அவற்றில் முக்கியமான சக்தி முதல்களாகும். இலங்கையைப் பொறுத்தவரை இன்று பயன்படுத்தப்பட்டு வரும் முக்கிய சக்தி முதலாக எரிபொருள் சக்தியைக் குறிப்பிடலாம். இதற்காக பல மில்லியன் ரூபாய்களை எமது நாடு வருடாவருடம் செலவுசெய்து வருகின்றது. எனினும் இவ்வாறு பல மில்லியன்களைச் செலவழித்து தேவையான அளவு எரிபொருளை வாங்கமுடியாத நிலை எதிர்காலத்தில் தோன்றவுள்ளது. ஏனெனில் உலகிலுள்ள எரிபொருளின் அளவு குறைந்துகொண்டு வருதலேயாகும். எனவே மாற்று சக்தி முதல்களைக் கண்டறிய வேண்டிய தேவை எமது நாட்டுக்கும் உலகுக்கும் ஏற்பட்டுள்ளது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் சூரிய சக்தியும் அணு சக்தியும் மிகவும் பொருத்தமானவையாகக் காணப்படுகின்றன.

அணுசக்தியை நாம் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் பயன்படுத்தலாம். விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாகப் பல நூற்றுக்கணக்கான அணுவாயுதங்களை உலக வல்லரசுகள் உருவாக்கி வைத்துள்ளன. இவை எமது பூமியைப் போல் பல பூமிகளை அழிக்கக்கூடிய




வல்லமையுடையன. விஞ்ஞான வளர்ச்சியின் இன்னொரு பக்கமாக பல நாடுகள் அணு உலைகளை நிறுவி அதிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. இவ் அணு உலைகளை நிர்மாணிக்க உயர் தொழில்நுட்பம் அவசியமாகின்றது. இவ்வணு உலைகளில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் அது பாரிய அழிவை ஏற்படுத்துமென்பதால் அவற்றின் பாதுகாப்பிற்கு கூடியளவு கவனஞ்செலுத்த வேண்டியுள்ளது. பூமி அதிர்ச்சி, சுனாமி போன்றவற்றால் அணு உலைகள் பாதிப்புக்குள்ளான சம்பவங்கள் அண்மையில் நடந்துள்ளன. எனவே இவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலென்பது இன்றைய விஞ்ஞானிகளுக்கு பெரும் சவாலாக உருவாகியுள்ளது.

### அணுவாயுதப் பேரழிவு

மகாபாரத யுத்தம் தொடங்கிய சமயம், தன் உறவினரைத் தானே கொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதே என அருச்சுனனின் மனதில் ஓர் இனம் புரியாத கலக்கம் தோன்றியது. அக்கலக்கத்தை நீக்க கண்ணன், பகவத் கீதையை அருச்சுனனுக்கு உபதேசித்தார் என்பது புராணக் கதை. அப் பகவத் கீதையில் கண்ணனால் அருச்சுனனுக்குச் சொல்லப்பட்ட ஓர் வேத மொழி. "உலகத்தைத் துகள்தூளாக்கும் மரண உருவெடுத்துவிட்டேன் நான்." என்பதாகும். மேற்படி வேத மொழியை மனிதன் தனது விஞ்ஞான அறிவால் உண்மையாக்கிய ஓர் சம்பவம் 16.07.1945 அன்று நிகழ்ந்தது. ஆம் அன்றுதான் அமெரிக்கா தனது முதல் அணுகுண்டுச் சோதனையை நியூ மெக்சிக்கோ நகரில் **Trinity** எனும் இடத்தில் அமைந்திருந்த அணுகுண்டுச் சோதனைத் தளத்தில் நிகழ்த்தியது. இச்சோதனைக்குத் தலைமை தாங்கியவர் அணுகுண்டின் பிதா என அழைக்கப்படும் **Robert Oppenheimer** ஆவார். இவர்தான் இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்ட அணு குண்டை, தன்கீழ் பல நாட்டு விஞ்ஞான வல்லுநர்களை இணைத்து அவர்களின் துணையோடு உருவாக்கியவர்.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் 06.08.1945 ஆம் திகதி ஜப்பானிய நகரமான கிரோசிமாவிலும் 09.08.1945 ஆம் திகதி இன்னுமொரு ஜப்பானிய நகரமான நாகசாகியிலும் அடுத்தடுத்து அணுகுண்டுகள் அமெரிக்காவால் போடப்பட்டு மனிதப் பேரழிவு ஏற்படுத்தப்பட்டது.


**Enola Gay B-29** எனும் போர் விமானத்திலிருந்து 06.08.1945 ஆம் ஆண்டு ஏறத்தாழ காலை 8.15 மணிக்கு "**Little Boy**" என்றழைக்கப்படும் யுரேனியக் குண்டு கிரோசிமாவின் மீது 9448.8m (31000 அடி) உயரத்திலிருந்து போடப்பட்டது. இக்குண்டு 3.2004m (10.5 அடி) நீளமும், 0.762m (2.5 அடி) அகலமும், 4399.92kg (9700 பவுண்டு) நிறையும் உடையதாயிருந்தது. 15000 தொன் TNT வெடிசக்தியையும் கொண்டிருந்தது. குண்டு போடப்பட்டு 43 செக்கன்களின் பின்னர் கிரோசிமாவிலிருந்து ஏறத்தாழ 579.12m (1900 அடி) உயரத்தில் **Little Boy**" என்றழைக்கப்பட்ட யுரேனியக் குண்டு வெடித்து பேரவலத்தை ஏற்படுத்தியது.




குண்டு வெடித்துச் சில நிமிடங்களின் பின் ஒரு பேரொளிச் சிவப்புக் கோளம் தோன்றியது. அதனைத் தொடர்ந்து பாரிய பயங்கர வெடிச் சத்தம் வானைப் பிளந்து ஒரு பிரளயத்தையே உருவாக்கியது.

இது நிகழும் போது அவ்விடத்திலிருந்து **17.699km** (11 மைல்) தொலைவில் திரும்பிச் சென்றுகொண்டிருந்த அணு குண்டை வீசிய Enola Gay B-29 போர் விமானத்தை அதிர்ச்சி அலைகள் தாக்கியதால் விமானம் ஆட்டங்கண்டது. **160.9km** இற்கு (100 மைல்) அப்பால் விமானம் சென்றபோதும் கோள வடிவ முகில் விமானியின் கண்களுக்குத் தெரிந்தது. இப்பிரமாண்டமான முகில், காளான் வடிவில் (**Mushroom Cloud**) பொங்கிப் பெருகும் புகைமண்டலமாகத் தோன்றியது. இப் புகைமண்டலத்தின் நடுவே சிவப்பு நிறக் கோளவடிவில் பொருட்கள் பற்றி எரியும் கோரக் காட்சி தோன்றியது.




கிரோசிமாவில் வீசப்பட்ட அணு குண்டால் ஏறத்தாழ 160,000 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 60,000 பேர் வரையில் குண்டுத் தாக்கத்தால் உருத் தெரியாதவாறு எரிந்துபோயினர். 130,000 ஜப்பானிய அப்பாவி மக்கள் காயமுற்றனர். அவர்களில் 43,500 பேர் படுகாயங்களுக்கு உட்பட்டனர். அணுகுண்டு வீசப்பட்டு ஐந்து வருடங்கள் முடிய மொத்தமாக மரணமடைந்தோர்எண்ணிக்கை200,000ஐத் தாண்டியது.

கிரோசிமா மற்றும் நாகசாகியில் வீசப்பட்ட அணுகுண்டுகளால் 25வீதமானோர் வெப்பக் கதிர் வீச்சால் இறந்து போயினர். 55 வீதமானோர் மற்ற அபாயத்தால் இறந்துபோயினர். 18வீதமானோர் கதிரியக்கம் சம்பந்தப்பட்ட நோய்களால் இறந்துபோயினர். இக் குண்டு வெடிப்பால் 10.36km² பரப்பில் இருந்த 70,000 வரையிலான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. இவற்றில் தீயணைப்பு நிலையம், பொலிஸ் நிலையம், ரயில் நிலையம், தபால் நிலையம், பாடசாலைகள், மருத்துவமனைகள், மின்சக்தி நிலையங்கள் என்பனவும் அடங்கும். குண்டு வெடித்த இடத்திலிருந்து சுமார் 3962.4m (13,000 அடி) தூரத்திலிருந்த தொலைத்தொடர்புக் கம்பங்களும் எரிந்துபோயின.

நகரிலிருந்த 45 மருத்துவமனைகள் முற்றாகவோ அன்றிப் பகுதியாகவோ தகர்த்தெறியப்பட்டன. இம் மருத்துவ மனைகளில் கடமையிலிருந்த சுமார் 200 வைத்தியர்களும் 1650 தாதியர்களும் இறந்துபோயினர் அல்லது முடமாகினர்.

**Fat Man** என்றழைக்கப்பட்ட 22000 தொன் TNT வெடிசக்தியைக் கொண்ட புளுட்டோனியக் (**Plutonium-239**) குண்டு நாகசாகி நகரின் மீது வீசப்பட்டது. இதில் ஏறக்குறைய 70,000 பேர்வரையில் இறந்துபோயினர்.

நாகசாகி நகரின் 33வீதப் பகுதி தரைமட்டமாக்கப்பட்டது. அணுகுண்டு வெடிப்பால் ஏற்பட்ட அதிர்வாலும் அலையாலும் வெப்பக் கதிர்ப்பாலும் உடனடியாக இறந்து போனவர்கள் தவிர அணுக் கதிரியக்கம் தாக்கி பல்லாயிரக்கணக்கானோர் சில காலம் நரக வேதனைக்குட்பட்டு நாளாந்தம் இறந்துபோயினர்.


அணுக்குண்டு வெடிப்பால் வெப்பநிலை 10,00,000F (**One million**) வரை உயரும் என்றும் ஒளித் தீக்கோளம் 244m (800 அடி) விட்டம் விரிவடையும் என்றும் உருவாகும் முகில் காளான் 14.5km (9 மைல்) உயரத்திற்கு எழும் என்றும் அணு விஞ்ஞானிகளால் கணக்கிடப்பட்டது. குண்டு வெடிப்பால் ஏற்பட்ட அலை 321.8ms⁻¹ வேகத்தில் வீசியதால் மனிதர்கள் தூக்கியெறியப்பட்டனர். வானத்தில் பறந்துகொண்டிருந்த பறவைகள் வானத்திலேயே எரிந்து சாம்பலாயின. நாய்கள், பூனைகள் போன்ற பிராணிகள் இருந்த இடம்கூடத் தெரியாதவாறு மறைந்துபோயின. மரங்கள் யாவும் எரிந்து பாலைவனம் போல் காட்சியளித்தன. தொலைபேசிக் கம்பங்கள் மற்றும் மின்சாரக் கம்பங்கள் எல்லாம் எரிந்து வளைந்து காணப்பட்டன. "ஒரு பெரிய சுத்தியலால் அடிக்கப்பட்டு அதிர்ச்சி அடைந்து தூக்கி எறியப்பட்டு கொதிக்கும் எண்ணெயில் போடப்பட்டது" போல் உணர்ந்ததாக ஓர் இளம் ஜப்பானியப் பெண் தனது நேரடி அனுபவத்தை விபரித்தார். விமானத்தையும் ஒளிக் கோளத்தையும் நேரடியாக உற்றுநோக்கியோரின் கண்கள் குருடாயின. வெப்பம் தாளாமல் பலர் குளங்களில் குதித்தனர். ஆனால் குளமோ கொதித்துக்கொண்டிருந்தது.

முதல் அணுகுண்டால் தாக்கப்பட்ட ஜப்பானிய வைத்தியர் **Dr. Michihiko Hachiya** தனது அனுபவம் பற்றி விபரிக்கையில், "அன்று அதிகாலை மருத்துவமனைக்கு செல்வதற்காக மருத்துவமனைக்குரிய உடையணிந்து புறப்பட்ட சமயம், யுத்த அபாயச் சங்கு ஊதியது. அதனைத் தொடர்ந்து பறக்கும் விமானச் சத்தம் கேட்டது. திடீரென மாபெரும் மின்னல் போன்றதொரு ஒளி கண்ணைப் பறித்தது. அதனைத் தொடர்ந்து ஒரு பாரிய ஒலிச் சத்தம் காதை அடைத்தது. தோட்டத்தில் தொங்கிக்கொண்டிருந்த உலோக விளக்கு என்றுமில்லாத பிரகாசத்தில் ஒளிர்ந்தது. வெளிச்சமயமாய் இருந்த வானத்தில் திடீரென இருள் பரவியது. அருகில் இருந்த வீட்டுத் தூண் ஒன்று திடீரென உடைந்து விழுந்ததால் வீட்டுக் கூரை அபாயநிலையில் தொங்கிக்கொண்டிருந்தது. இதனால் அச்சமடைந்து வீட்டிலிருந்து தப்பி வீதிக்கு வந்தபோது மரக்கிளைகளும் இடிந்த கட்டடக் கழிவுகளும் குப்பைகளும் வீதியில் நாறுமாறாகக் கிடந்தன. இவற்றைத் தாண்டி தோட்டத்திற்குள் ஓடியபோது ஏதோ தாங்கமுடியாத களைப்பு ஆட்கொண்டது. ஒரு கணத்தில் அணிந்திருந்த உடைகள் யாவும் கிழித்தெறியப்பட்டன. உடலின் வலதுபுறம் முழுவதும் ஆங்காங்கே வெட்டப்பட்டு இரத்தம் வழிந்தோடியது. கூரிய ஒரு நீண்ட இரும்பு ஆணி தொடையைக் குத்திக் கிழித்து தாங்கமுடியாத வலியை ஏற்படுத்தியது.

(தொடரும்)



Little boy



Little boy



முகில் காளான்
Mushroom cloud



1945 August இல் கிரோசிமா நகரம்

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

255

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)



டபிள்யூ.டி.தகநாயக்க

இப்பிரதிநிதித்துவத்தை பொன்னம்பலம் சிறுபான்மையினருக்காக சோல்பரி ஆணைக்குழுவின் முன் வைத்த ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையுடன் ஒப்பிடும் போது சுமார் 68:32 என்ற விகித அடிப்படையில் காணப்படுகின்றது.

இவ்வேளையில் சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு வருமுன்னர் பொன்னம்பலத்திற்கும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க தலைமையிலான லிபரல் (Liberal) சிங்களத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற மகாநாட்டில் ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கைக்குப் பதிலாக சிங்களவருக்கு 60 வீதமும் சிறுபான்மையினருக்கு 40 வீதமும் வழங்குவதற்குக்கூட விரும்புவதாக மேற்படி தலைவர்கள் பொன்னம்பலத்திற்கு தெரிவித்திருந்தனர்.

ஆனால் பொன்னம்பலம் தன் விடாப்பிடியான கொள்கையினாலும் பிரித்தானிய அரசின் மேல் வைத்த நம்பிக்கையினாலும் அதற்கு உடன்படவில்லை. பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை இறுதியில் பயனற்றுப் போனதோடு தமிழரின் பிரதிநிதித்துவமும் அரசியல் அந்தஸ்தும் மிகவும் இழிவான நிலைக்குள் தள்ளப்பட்டதனை சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற 1947 ஆம் ஆண்டுத் தேர்தல் மிகவும் தெளிவாகக் காட்டுகின்றது.

மேலும் பொன்னம்பலமும் தமிழ்த் தலைவர்களும் இந்தத் தேர்தலுக்குப் பின்னர் சிறுபான்மையினருக்கு ஐம்பதுக்கு ஐம்பது சமபிரதிநிதித்துவம் என்ற கொள்கையையோ அல்லது கோரிக்கையையோ ஒரு போதும் முன்வைக்கவில்லை.

அதற்குப் பின் அவர்களுக்கு தமிழரின் அரசியல் நிலைபற்றி எதுவித அரசியல் திட்டங்களும் கொள்கைகளும் இருக்கவில்லை.

அதிகமான தமிழ்ப் பிரதிநிதிகள் கொழும்பை அடித்தளமாகக் கொண்ட மத்திய தர, மேற்தட்டு வர்க்கத்தினர் ஆவர். அவர்கள் தமது சொந்தப் பதவிகளிலும் அந்தஸ்திலுமே அதிக அக்கறை கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர்.

உதாரணமாக ஐக்கிய தேசிய அரசாங்கம் 1947 தேர்தலில் வடமாகாணத்தில் வெற்றிபெற்று பாராளுமன்றத்தைக் கூட்டி அமைச்சரவையை அமைத்த போது பிற்காலத்தில் அடங்காத் தமிழன் எனத் தனக்குத் தானே பெயர் சூடிக்கொண்ட சி.சுந்தரலிங்கம் கியூ.சி. வவுனியா தொகுதிக்கு சுயேட்சைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டு சேனநாயக்க அமைச்சரவையில் வர்த்தக அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தமிழர்களின் ஒட்டுமொத்தமான அரசியல் சுதந்திரத்தில் அவர்களுக்குத் தீவிரமான அக்கறை இருக்கவில்லை என்பதனை 1947 ஆம் ஆண்டுத் தேர்தலுக்குப் பின்னர் தமது சம பிரதிநிதித்துவக் கொள்கையை உதறித்தள்ளிவிட்டு 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது பொன்னம்பலம் உட்பட பல தமிழ்ப் பிரதிநிதிகள் சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

ஐம்பதுக்கு ஐம்பது கேட்ட ஜி.ஜி.பொன்னம்பலம் 1948 இல் சேனநாயக்க அரசில் கைத்தொழில் அமைச்சராகவும் பதவியேற்றுக்கொண்டார். 15 வருடங்களுக்கு மேலாகத் தமது ஐம்பதுக்கு ஐம்பது கற்பனைவாதக் கோரிக்கையில் விடாப்பிடியாக நின்ற ஜி.ஜி. பொன்னம்பலம் தனது கோரிக்கை தோல்வி கண்ட அடுத்த நிமிடமே தனது அரசியல் எதிரிகளிடம் தஞ்சம் புகுந்திருப்பது அவரது விநோதமான அரசியல் போக்கையும் அரசியல் தூரநோக்கமின்மையையும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

அதுமட்டுமல்லாமல் தானும் தனது சகாக்களும் 1947 பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய மகிழ்ச்சியில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் தமக்குக் கிடைத்த வெற்றி தமிழ்மக்களுக்குக் கிடைத்த வெற்றியெனக் கூறுகின்றார். அத்தோடு சிங்கள அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதற்குத் தாம் தயார் என்றும் பறைசாற்றுகின்றார்.

இலங்கைச் சிறுபான்மையினருக்கான சமபிரதிநிதித்துவம் என்பது பற்றியும் தமிழ் அரசியல் தலைவர்களின் நிலைப்பாடு பற்றியும் ஜி.ஜி.பொன்னம்பலம் தனது அரசியல் கூட்டத்தில் ஆற்றிய உரையொன்று 05.02. 1946 இந்து ஒகனில் வெளியிடப்பட்டது. அதிலுள்ள முக்கிய விடயம் வருமாறு,

தமிழர் தமது விட்டுக்கொடுக்க முடியாத உரிமைகளைப் பாதுகாக்கும் அதேசமயம் இலங்கையிலுள்ள ஏனைய இனத்தவரோடு சேர்ந்து பொது நலனுக்காக உழைக்கும் வகையில் ஒரு கொள்கையையும் திட்டத்தையும் அவர்கள் முன்வைப்பது அத்தியாவசியமாகின்றது.

எனவே நான் இனங்களுக்கிடையிலான ஒரு இளகுநிலை ஒத்துழைப்பு நிலவவேண்டுமென முன் மொழியத் தீர்மானிக்கின்றேன். வறிய வெகுசனத் தமிழரில் பெரும்பான்மையினருக்கு நலனளிக்கும் இந்தத் திட்டம் ஒரு சமூக நலக் கொள்கையையும் உள்ளடக்கும் என்பதுடன் அது பெருமளவிலான வெகுசன சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொன்னம்பலம் தனது ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை அறவே கைவிட்டு தமிழரின் பொருளாதார நலன்களுக்காகவும் அபிவிருத்திக்காகவும் சிங்கள அரசுடன் இணைந்து பொறுப்புடன் இயங்கப் போவதாக தமது அரசியல் பிரதிநிதிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் அறிவித்திருக்கின்றார்.

இது பொன்னம்பலத்தினது அரசியல் நேர்மையின்மை யையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் அமைச்சர் பதவிக்கு அவர் ஏற்கனவே அடிகோலி விட்டார் என்பதையும் காட்டுகின்றது. ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் தமது ஆசைகளைப் பூர்த்தி செய்ய இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது.

டி.எஸ்.சேனநாயக்க சோல்பரி ஆணைக்குழுவினரைத் தனியாகச் சந்தித்தமையும் அவர் தனது பிரதிநிதியாக ஒ.கே. குணதிலகவை அனுப்பி வைற்ஹோல் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியமையும் சோல்பரி அரசியல் சீர்திருத்தத்திற்கு சார்பாகத் தமிழ்ப் பிரதிநிதிகள் வாக்களித்தமையும் சோல்பரி அறிக்கை அரசாங்க சபையில் சமர்ப்பிக்கப்பட்டு வாக்களிப்புக்கு விடப்பட்ட சமயத்திலே ஜி.ஜி. பொன்னம்பலம் பிரித்தானியாவில் வைற்ஹோல் அதிகாரிகளுடன் பேச்சு நடத்திக் கொண்டிருந்தமையும் ஐம்பதுக்கு ஐம்பது சமபிரதிநிதித்துவ கோரிக்கையை அடியோடு கைவிட்டு சேனநாயக்க அரசாங்கத்துடன் அவர் இணைந்தமையையும் அமைச்சர் பதவியைப் பெற்றமையையும் அவதானிக்கும் அரசியல் மாணவர் ஒருவருக்கு மேற்படி தமிழ் அரசியல் தலைவர்களது நடத்தைகள் இயல்பாகவே சந்தேகத்தை எழுப்பக் கூடியவை.

(தொடரும்)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் 344 குடும்பங்கள் பாதிப்பு!

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களையும், அவர்களின் குடும்பத்தவர்களையும் வலுவூட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சமூக பொருளாதார கலாசார ஆன்மீக செயற்பாடுகளை வலுப்படுத்த் தேவையான அவசியங்களை அரசாங்கம் இனங் கண்டிருக்கிறது. இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற வன்முறைகளினால் சேதமாக்கப்பட்ட பள்ளிவாசல்களை புனரமைக்கவும், மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் இடம் பெற்ற பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 344 ஆகும். இதில் 156 குடும்பங்களில் ஒருவரேனும் மரணம் . ஏதோவொரு பாதிப்பை கொண்ட குடும்பங்களின் எண் ணிக்கை 188 ஆகும். ஆகக் குறைந்த வகையில் ஒருவர் காயமடைந்திருப்பதாக தெரி விக்கப்பட்டது. இந்த குடும்பங்களின் அங்கத்தவர்களின் சமூக பொருளாதார கலாசார கல்வி ஆகிய ரீதியில் மறுசீரமைப்பு மற்றும் மீண்டும் மேம்பாட்டுக்காக திட்டமிட்ட வேலைத்திட்டம் கல்வி அமைச்சினால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த தாக்குதலின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை ஊக்குவிப்பதற்காக கத்தோலிக்கசபையின் சமூக சேவை நிறுவனங்களான செத்சரண நிறுவனத்தின் இணைப்புடன் நகர குடியிருப்பு அதிகார சபையின் மூலம் ஸ்வசக்தி அபிவிருத்தி விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ-7)

# முஸ்லிம் ஆசிரியரை இடமாற்றக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

அம்பலாந்தோட்டை-மல்பெத்தாவ மகா வித்தியாலயத்தில் பணியாற்றிவரும் முஸ்லிம் ஆசிரியரை இடமாற்றுமாறு கோரி, அந்தப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்களால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

அம்பாந்தோட்டை வலயக் கல்விப் பணிமனைக்கு முன்னால், இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.


பாடசாலைக்கு வருகைதரும் மாணவர்கள், ஆசிரியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் என அனைவரும், பெற்றோர் பாதுகாப்புக் குழுக்களால் பாடசாலை வாயிலுக்கு முன்னால் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்ற போதிலும் குறித்த ஆசிரியர் தன்னைப் பரிசோதிக்க வேண்டாமெனக் கூறுவதாகவும் சோதனை செய்ய இடமளிப்பதில்லை என்றும் பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ-7)



# சந்தேக நபரை விடுவிக்குமாறு தளபதியை கேட்கவில்லை

## றிசாத் மறுப்பு





(கொழும்பு)

கைது செய்யப்பட்டவரை விடுவிக்குமாறு தான் இராணுவத் தளபதிக்கு அழுத்தம் கொடுக்கவில்லை என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர், "முஸ்லிம் விவகார அமைச்சின் மூத்த ஆலோசகர் ஒருவர், என்னைத் தொலைபேசியில் அழைத்து.

தனது மகனை அடையாளம் தெரியாத குழுவி னர் கொண்டு சென்று விட்டனர் என்றும் அவர் எங்கிருக்கிறார் என்று தேடிப் பார்த்துச் சொல்லுமாறும் கேட்டார்.

பின்னர் இரண்டு நாட்களாக அவரைப் பற்றி பொலிஸாரிடம் விசாரித்தேன். தெகிவளை பொலிஸ் நிலையத்துக்கும் சென்றேன். அவர் அங்கு இல்லை என்றனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவைத் தொடர்பு கொண்டேன். பொலிஸாரிடம் அவர் இல்லையென்றால், இராணுவத் தளபதியிடம் கேட்குமாறு கூறினார்.

அந்த நபர் இராணுவத்தின் காவலில் இருக்கிறாரா? என்று விசாரிக்கவே இராணுவத் தளபதியை தொடர்பு கொண்டேன்.

மனிதாபிமான அடிப்படையிலேயே அவ்வாறு செய்தேன். யாரையும் விடுதலை செய்யுமாறு நான் இராணுவத் தளபதியிடம் கேட்கவில்லை.

எனது சகோதரர் கைது செய்யப்படவில்லை. அதனை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை ஒன்றை பெற்றுள்ளேன்.

எனது ஆலோசகராக இயங்கிய மௌலவி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறேன். எனக்கு இரண்டு ஆலோசகர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களில் குறித்த மௌலவி இல்லை.

எனது இணைப்புச் செயலர் கைது செய்யப்பட்டதாக வெளியான செய்திகளும் பொய்யானவை" என்றும் அமைச்சர் றிசாத் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1728

### குவேனி




### மித்ரன்




### கமலன்




### ரூமி




### அசோக்





### ஜெரோம்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை சீர்குலைப்போம்!

## மகிந்தானந்த எச்சரிக்கை



(கொழும்பு)

**அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விவாதத்திற்கு சபாநாயகர் அடுத்த சில தினங்களில் சந்தர்ப்பம் வழங்காவிட்டால், நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் சீர்குலைக்கப்படும் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே எச்சரித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அமைச்சர் றிசாத் பதியுதீனின் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இப்ராஹிம் சகோதரர்களின் தந்தை, றிசாத் பதியுதீனின் சகோதரருடன் வர்த்தகம் செய்துள்ளார்.

பயங்கரவாதத்திற்குக்கு உதவிய நபர்கள் கைது செய்யப்படும் போது அவர்களை விடுவிக்க இராணுவத் தளபதிக்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.

பயங்கரவாதிகளின் தந்தையுடன் இணைந்து இலங்கைக்கு மிளகை இறக்குமதி செய்து இலங்கையின் பெயரை பயன்படுத்தி ஏற்றுமதி செய்துள்ளார். இப்படியான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

இதற்கு மேல் என்ன சாட்சியங்கள் தேவை. அரசாங்கத்தை அமைக்கத் தான் உதவி செய்ததாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனக்கு எதிராக பேசுவதாகவும் அரசாங்கத்தில் இருந்து விலகப்' போவதாக றிசாத் பதியுதீன் கூறியதும் பிரதமர் பயந்து போனார்.

பயங்கரவாதத்திற்கு உதவும் நபர்களை அரசாங்கம் பாதுகாத்து வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக கூறினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் எம்முடன் பேசினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

அடிப்படைவாதிகளை அரசாங்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டாம். ஆறு மாதங்கள் அரசாங்கத்தை கொண்டு நடத்த உதவுவதாக நாங்கள் பிரதமரிடம் கூறினோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர அடுத்த சில தினங்களில் இடமளிக்க வில்லை என்றால், நாடாளுமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்க விட மாட்டோம்.

நாடாளுமன்றத்தில் நாங்கள் கடும் நடவடிக்கை எடுப்போம் எனவும் மகிந்தானந்த அளுத்கமகே எச்சரித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

## மின்சார நெருக்கடியை தீர்க்க அரசாங்கம் விசேட நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியை தீர்ப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால நடைமுறைகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், மின்சக்தி எரிசக்தி மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி, கனிய வள அபிவிருத்தி மற்றும் துறைமுகம் மற்றும் கடல் நடவடிக்கைகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி ஆகிய அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 1,314 ஏக்கர் வயல் நிலங்கள் குருநாகலில் வரட்சியால் பாதிப்பு

(குருநாகல்)


குருநாகல் மாவட்டத்தில் 1,314 ஏக்கர் வயல் நிலங்கள் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

குருநாகல் மாவட்டத்தில் மழையின்மை மற்றும் படைப்புழு தாக்கமும் காணப்படுவதாக, குருநாகல் மாவட்ட உதவி விவசாய சேவைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

மாவட்ட விவசாயிகள் படைப்புழுவால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கோத்தாவுக்கு எதிரான வழக்கு 19 ஆம் திகதி விசாரணைக்கு



முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் 19ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு விஷேட மேல் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தீவிரவாதச் செயற்பாடு குறித்து ஞானசாரர் கூறிய விடயங்கள் உண்மையாகியுள்ளன

## ஆளுநர் அசாத்சாலி நினைவுபடுத்தல்



(கொழும்பு)

தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பில் ஞானசார தேரர் எதிர்வு கூறிய விடயங்கள் உண்மையாகியுள்ளதாக மேல்மாகாண ஆளுநர் அசாத்சாலி தெரிவித்தார்.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற தீவிரவாதச் செயற்பாடுகள் தொடர்பில் ஞானசார தேரர் கடந்த காலங்களில் தெரிவித்த கருத்துக்கள் தற்போது உண்மையாகியுள்ளன. தேரருடன் எங்களுக்கு தனிப்பட்ட ரீதியில் பிரச்சினை இருக்கவில்லை. மத ரீதியிலான வேறுபாடுகளே இருந்து வந்தன.

அந்த வேறுபாடுகளை இல்லாமலாக்கிக்கொள்ள அவர் சிறைக்குச் செல்வதற்கு முன்பிருந்தே கலந்துரையாடல்களை மேற்கொண்டு வந்தோம்.

அத்துடன் தேரருடன் நாங்கள் 5 சுற்றுக்கள் மேற்கொண்ட கலந்துரையாடல்கள் மூலம் எமக்குள் இருந்த மத ரீதியிலான பிரச்சினையை தீர்த்துக் கொண்டோம். இறுதியாக இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக ஒரு குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்கும் நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முப்படை அதிகாரிகளுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

முப்படையில் உள்ள அனைத்து அதிகாரிகள் மற்றும் ஏனைய பதவியில் உள்ளவர்களுக்கும் வழங்கப்படும் கொடுப்பனவு உள்ளிட்டவை அதிகரிக்கப் பட்டுள்ளன.

முப்படை அதிகாரிகள் மற்றும் ஏனைய தரத்திலானவர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்படும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர 2019 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தின் போது அறிவித்திருந்தார்.

முப்படையை சேர்ந்தவர்களின் சம்பளத்திற்கு மேலதிகமாக அதிகாரிகளுக்கு செலுத்தப்படும் மாதாந்த கொடுப்பனவு 2019 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் நடைமுறைப்படுத்தும் வகையில் ரூபா 23,231 வரையிலும் ஏனைய பதவி தரத்திலான மாதாந்த கொடுப்பனவு 19,350 ரூபா வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 180 | 170 | 200 |
| தக்காளி | 110 | 130 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 140 | 100 |
| கோவா | 100 | 120 | 70 | 120 |
| கரட் | 140 | 110 | 80 | 240 |
| பூசணி | 50 | 70 | 60 | 80 |
| புடோல் | 120 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 80-150 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 150 | 180 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 90 | 70 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 70 | 120 |
| பீற்றூட் | 90 | 100 | 70 | 120 |
| கறிமிளகாய் | 100 . | 120 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 180 | 100 | 60 | 120 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 15 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 350 | 350 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 20-40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 150 | 100 | 140 |
| வெங்காயப்பூ | 220 | — | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 50 | 30 | 10 | 20 |
| ஈரப்பலா | 100 | — | — | 120 |




# புத்திசாலி பெலிக்ஸ்



ஒரு ஊரிலே ஏழைத் தாய் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் மிகவும் அன்பானவள். அவளுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவனது பெயர் பெலிக்ஸ். அம்மாவைப் போலவே அன்பான குணங்கள் நிறைந்தவன். ஆனால், நல்ல பலசாலி. நாளுக்கு நாள் பலம் மிக்கவனாக அவன் வளர்ந்து வந்தான்.

அந்த ஊர் அரசன் மிகவும் கர்வம் பிடித்தவன், இரக்கமில்லாதவன். ஏழைகளைத் துன்புறுத்துவதில் இன்பம் காண்பவன்.

எல்லாவிதமான போர் முறைகளையும் கற்றுத் தேர்ந்து கொண்டான். அங்கிருந்த எல்லா வீரர்களையும் அவன் சண்டையிட்டுத் தோற்கடித்தான். அதனால் அங்குள்ள மக்கள் எல்லாரும் அவனுக்கு "மகா வீரன்" என்ற பட்டத்தைச் சூட்டினர். மகாவீரன் பெலிக்ஸ் தன்னுடைய பலத்தையும் ஆற்றலையும் தவறான விடயங்களுக்காக ஒருபோதும் பயன்படுத்தவில்லை. மக்களின் நன்மைக்காகவே தன் வீரத்தை பயன்படுத்தி வந்தான். கொடிய காட்டு மிருகங்கள் அந்த ஊரின் வயல்களுக்குள் புகுந்து நாசம் செய்த போது அவன் அவற்றை வேட்டையாடிக் கொன்றான். இதனால் மக்கள் அவன் மீது மேலும் அன்பு கொண்டனர்.

இவனது வீரச்செயல் அரசனின் காதுகளில் வீழ்ந்தது. அரசனுக்கு அவன் மீது வெறுப்பு ஏற்பட்டது. இப்படியே இவனது புகழை வளரவிட்டால் தனக்கும் ஆபத்து ஏற்படும் என்று எண்ணினான். எனவே, பெலிக்ஸை எப்படியும் அழித்துவிட நினைத்தான் அரசன்.

பெலிக்ஸை எப்படி அழிப்பது என்று அவன் யோசித்தான். பெலிக்ஸை போன்ற பலசாலியோடு மோதுவதற்கு யாரும் முன்வர மறுத்துவிட்டனர். அரசனுக்கு இதனால் மிகுந்த ஏமாற்றமாகிவிட்டது.

தந்திரத்தாலும் வஞ்சனையாலும்தான் இவனை வெற்றி கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு அரசன் வந்தான்.

பெலிக்ஸை அரசன் கொல்ல நினைத்த விடயம் அவனுக்குத் தெரிய வந்து கொஞ்சமும் தாமதியாது அவன் தன்னுடைய தாயையும் அழைத்துக் கொண்டு மாயமாக அங்கிருந்து மறைந்து விட்டான். அங்குள்ள தன் பிரியமான தோழர்களான சின்னஞ்சிறு குழந்தைகளை விட்டுப் பிரிந்து போவது தான் பெலிக்ஸுக்கு மிகவும் கவலையை அளித்தது.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு பூதம் வந்தது. அந்த பூதம் மிகவும் பிரமாண்டமானதாயிருந்தது. அது மூச்சுவிட்டால் புகை புஸ்புஸென்று கிளம்பிற்று. வாயைத் திறந்தாலோ நெருப்புக் கக்கிற்று. பெரிய முட்கள் நிறைந்த பனைமரம் போல அதன் வால் நீண்டிருந்தது. தனது அச்சமூட்டும் வாலினால் அது மிருகங்களையும் சுழற்றிப் பிடித்து அழித்துக் கொன்றது.

இதனால் ஊர் மக்கள் வெளியே வர அஞ்சினர். வீட்டுக்குள்ளேயே அடைந்து கொண்டனர்.

அவர்கள் வயலுக்குப் போகாததால் பயிர் செய்ய முடியவில்லை. இதனால் அந்த ஊரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. பெலிக்ஸ் ஒருவனாலேயே அந்த விலங்குப் பூதத்தைக் கொல்ல முடியும் என நினைத்த அரசன் அவனைத் தேடிக் கண்டுபிடிக்க ஒற்றர்களை எல்லாத் திசைகளுக்கும் அனுப்பி வைத்தான். அவர்களும் பெலிக்ஸ் இருக்குமிடத்தை அறிந்து கொண்டனர். அரசனுக்குச் செய்தியை உடனே அறியப்படுத்தினர்.

உடனே அரசன், பெலிக்ஸை தனது அரண்மனைக்கு இழுத்து வரும்படி கட்டளையிட்டான். படை வீரர்கள் அவனைக் கைது செய்ய முயன்றனர். பெலிக்ஸ் அவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு திசையில் வீசி எறிந்தான். படை வீரர்கள் எதுவும் செய்ய முடியாமல் அங்கிருந்து திரும்பி ஓடிப் போய் அரசனிடம் நடந்தவற்றைக் கூறினர்.

அரண்மனையில் எல்லாரும் ஒன்றாகக் கூடி யோசித்தனர். கடைசியில் பெலிக்ஸிடம், விலங்கு பூதத்திடம் இருந்து தங்களைக் காப்பாற்றும்படி கேட்க குழந்தைகளை அனுப்பி வைப்பதென்று முடிவாயிற்று. அப்படியே அவன் இருந்த வீட்டிற்கு குழந்தைகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தாங்கள் பூதத்திற்குப் பயந்து வாழ்வதை குழந்தைகள் பயத்தோடு அழுதபடியே கூறியதைக் கேட்ட பெலிக்ஸ் மிகவும் இரக்கம் கொண்டான். அந்தக் குழந்தைகளின் கண்ணீரை அவன் துடைத்து அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை சொன்னான். விலங்குப் பூதத்தோடு தான் சண்டையிட்டு அதை வெல்வதாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்தான்.

பின்னர் அவன் பன்னிரெண்டு பீப்பாய் நிறையத் தாரையும் பன்னிரெண்டு வண்டியில் வைக்கோலையும் சேகரித்தான். பெரியதொரு தண்டாயுதத்தையும் எடுத்துக் கொண்டான். பூதத்தின் குகை வாசலிலே இவற்றோடு போய் நின்ற அவன், பூதத்தை தன்னோடு சண்டைக்கு வரும்படி சவால் விட்டான்.


பூதம் ஆவென்று வாயைப் பிளந்து சீறியபடி அவனைக் கடிக்க வந்தது. உடனே கொதிக்க வைத்த தார்க் குழம்பை அதன் வாயினுள்ளே ஊற்றினான். அந்தத் திரவம் பூதத்தின் பற்களையும் வாயையும் கெட்டியாகப் பிடித்து, அது வாயைத் திறக்காமல் செய்துவிட்டது. தனது கையில் தண்டாயுதத்தை எடுத்து அதன் முகம், உடலெங்கும் ஓங்கி அடிக்கத் தொடங்கினான். ஏதும் செய்ய முடியாத பூதம் தனக்கு இரக்கம் காட்டும்படி மன்றாடியது. தீமைக்கு ஒருபோதும் இரக்கம் காண்பிக்கக் கூடாது என்று எண்ணினான் பெலிக்ஸ். பெரிய ஏரை அந்த பூதத்தின் மேல் பூட்டி, நகரத்தின் வயல் முழுவதையும் நன்றாக உழுது முடித்தான் பெலிக்ஸ்.

இவ்வளவு நாளும் வீட்டுக்குள் அடைந்து கிடந்த மக்கள் வெளியே வந்தனர். பெலிக்ஸை வாழ்த்தினர். ஆடிப்பாடி மகிழ்ந்தனர். குழந்தைகள் பெலிக்ஸை சுற்றி நின்று மகிழ்ந்தனர். பிறகு பூதத்தை மன்னித்து அதை அந்த ஊரை விட்டே போய்விடும்படி கூறினான்.

பூதமும் அங்கிருந்து போய்விட்டது. இவ்வளவு காலமும் கொடியவனாக நடந்து வந்த அரசன் தனது குணத்தை மாற்றிக் கொண்டான். பெலிக்ஸை மிகவும் போற்றினான். மீண்டும் அவனையும் அவனது தாயாரையும் தனது ஊருக்கே வரச் செய்தான். பெலிக்சை அரசன் தனது படைத் தளபதியாக நியமித்து ஆனந்தமாக வாழ்ந்து வரலானான்.

## வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





**நோயாளி:-** ஏன்கொஸ்பிற்றல் முழுக்க இனிப்புப் பண்டம் கொடுத்து மகிழ்விக்கிறீங்க...?

டாக்டரின் பிறந்த நாளா!

**நேர்ஸ்:-** இல்லப்பா! இண்டைக்குத்தான் டாக்டரின் ஆப்பரேசன் சக்சஸா முடிஞ்சிருக்கு.

பேசண்ட் பிழைச்சிட்டார்!

## பொது அறிவுத்துணுக்குகள்

- உலகில் மீன் இனம் தோன்றி சுமார் 50 கோடி ஆண்டுகள் ஆகின்றன.
- இசைக்கருவிகளுள் ஒன்றான வீணையில், 7 தந்திக் கம்பிகள் உள்ளன.
- எறும்பின் ஆயுட்காலம், 10 ஆண்டுகள்.
- முதலைக்கு 60 பற்கள் உண்டு. உலகிலேயே சர்க்கரை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு, கியூபா.
- 'கறுப்பு ஈயம்' எனப்படும் தாது, கிராபைட்.
- கார்பன் மோனாக்சைடும், ஹைட்ரஜனும் சேர்ந்த கலவையின் பெயர், 'நீர்வாயு'.

சுயமாக முடிவெடுக்கத் தெரியாதவன், பெரும்பாலும் அடிமையாகவே இருப்பான்.

– யாரோ

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# இலங்கை பௌத்த நாடல்ல அது இந்துத் தமிழ் நாடு

இலங்கை பௌத்த சிங்கள நாடல்ல. இலங்கை இந்துத் தமிழர்களின் நாடு. இலங்கையின் பூர்வீகக்குடிகள் இந்துத் தமிழர்களே என வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு உண்மையை – வரலாற்றுச் சான்றைத் துணிந்து கூறுவதற்கு ஒரு தலைவன் வேண்டுமல்லவா!

அதுதான் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களைத் தமிழ் மக்கள் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்வதற்குக் காரணமாகிறது.

ஒரு சிலர் நம்மைப் பார்த்துக் கேட்பார்கள். நீதியரசர் விக்னேஸ்வரனை வலம்புரி பத்திரிகை ஆதரிக்கிறது. இது எதற்கானது? இதை நடுநிலை என்று கூற முடியுமா? என்று.

இவ்வாறு நம்மிடம் கேட்டவர்களுக்கு இப்போது வலம்புரியின் நடுநிலைத்தன்மையும் உண்மையின் பக்கம் நிற்பதும் ஏன் என்பது புரிந்திருக்கும்.

மகாபாரதப் போரில் தர்மம் வெல்ல வேண்டுமாயின் கிருஷ்ண பரமாத்மா பண்டவர் பக்கமே நிற்க வேண்டும். இதைவிடுத்து நான் அவதாரம். எனவே அந்தப் பக்கமுமில்லை. இந்தப் பக்கமுமில்லை என்று கூறி, கிருஷ்ண பரமாத்மா பக்கம் சாராமல் நின்றிருந்தால், அதர்மமே வென்றிருக்கும்.

ஆக; நடுவுநிலை என்பது தர்மத்தின் பக்கம் நிற்பது, உண்மையின் பக்கம் நிற்பது, பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுப்பது, நீதி மறுக்கப்பட்டவர்களுக்காகப் பாடுபடுவது. இதுவே நடுவுநிலைமை.

இராவணன் சீதையைக் கடத்திச் செல்லும் போது அதனைத் தடுக்கச் சென்ற சடாயுவே உண்மையான வீரனும் நடுநிலையாளனும். இதனை அறம் உரைப்பவர்கள் மறந்துவிடலாகாது.

இதுபோன்றதுதான் வலம்புரியின் நிலைப்பாடும். தமிழினத்தை தூக்கி எறிபவர்களை ஆதரித்து எழுதுவது நடுநிலையாகாது. அது கெடுநிலை.

ஆக, உண்மை எங்கிருக்கிறதோ; தர்மம் எங்குள்ளதோ; நீதியும் நியாயமும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நேர்மையாகக் குரல் கொடுப்பதுமான கடமையை யார் செய்கின்றனரோ அவர்களை ஆதரிப்பதுதான் தர்மம். அதுதான் நடுவுநிலைமை.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு அதற்கே முன்னுரிமை என்று கூறுவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கூறியது எனில், இலங்கைத் தமிழர்களின் பூர்வீக வரலாற்றை கூட்டமைப்பு விற்றுவிட்டது என்பதுதான் அதன் பொருள்.

எங்கள் தொன்மையை கைவிட்டு, இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று, ஏற்று வாழ்கின்ற வாழ்வைவிட, வீதியில் குந்தியிருந்து ஒரு முழத்துண்டு விரித்து யாசிப்பது மேல்.

உண்மை எதுவோ – வரலாற்றின் பூர்வீகம் எதுவோ அதனை அழுத்திக்கூற வேண்டும். அதை எங்கள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் துணிந்து முன்வைத்துள்ளார். இதுவே நமக்குத் தேவை.

பௌத்தத்துக்கே முன்னுரிமை என்று அவர்கள் கூறட்டும். அதுபற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் இலங்கையின் பூர்வீகம் இந்துத் தமிழ் என்பதை எப்போதும் நாம் கூற வேண்டும். அதுவே உண்மை. அதுவே தமிழனைத் தமிழனாக வாழ வைக்கும்.

# தென்மராட்சியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்க சபையில் தீர்மானம்

## உறுப்பினர்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பது தொடர்பாக சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதனைப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்க வேணடுமென சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தென்மராட்சிப் பகுதியில் பரவலாக இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸார் கண்டும் காணாமலும் இருந்து வருகின்றனர். நாளுக்கு நாள் போட்டி போட்டு மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை இறுதி முடிவெடுக்க வேண்டும். பொலிஸ்மா அதிபருக்கு இது தொடர்பாக தெரியப்படுத்தி சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க விசேட பொலிஸ குழுவை நியமிக்க வேண்டும். மறவன்புலோ பகுதியில் அண்மையில் இரண்டு டிப்பர் சட்டவிரோத மண் பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இருப்பினும் பொலிஸார் அவ்விடத்திற்கு வரவில்லை. சில பகுதிகளில் வயல் நிலங்களில் கூட சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுகிறது. யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வடக்கு ஆளுநருடன் கலந்து பேசியும் இன்றுவரை தீர்வு கிடைக்கவில்லை. நாம் இது தொடர்பாக தொடர் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

தனங்கிளப்பு மற்றும் தச்சன்தோப்புச் சந்திகளில் பொலிஸ் காவலரண் அமைப்பதன் மூலம் தென்மராட்சி தெற்குப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க முடியும். மேலும் தென மராட்சியின் தனங்கிளப்பு, மறவன்புலோ, கெற்பேலி, மந்துவில், வரணி, கரம்பகம் மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக உறுப்பினர்கள் மேலும் சுட்டிக் காட்டியிருந்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்கு பிரதேச சபைத் தவிசாளர் பதிலளிக்கையில்,

பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்தால் எந்தவித குற்றச்செயல்களும் இடம்பெற மாட்டாது. சட்டவிரோத மணல் அகழ்வுத் தடுப்புப் பணிகளை எமது பிரதேசத்தில் மாத்திரம் அல்ல யாழ். மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதனைவிட இவ்வாறான விடயங்களில் உறுப்பினர்கள் தமது தனி மனித பாதுகாப்பைக் கருத்தில் கொள்ள வேணடும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (இ-30)

# பொதுக்கூட்டம்

(கொடிகாமம்)

கொடிகாமம் (மிருசுவில்) பிரதேச வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வைத்தியசாலையின் கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக தெரிவும் பல்வேறு விசேட அபிவிருத்திசார் விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன. அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உயர்ந்த கருத்துக்களை வழங்கி நிர்வாகம் சிறப்புற ஒத்துழைப்பை வழங்குமாறு நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ம-3,114)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில இலங்கை வங்கி பிரதேசம் சுன்னாகம், டச் வீதி (அச்சுவேலி), செல்வநாயகபுரம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில நீதிபுரம், அம்பகாமம், புலுமச்சிநாதிகுளம், ஒலுமடு, தச்சடம்பன், மணவாளன் பட்டுமுறிப்பு, சின்னசாளம்பன் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பெரியார்குளம், பூந்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

# வடக்கு வருமானப் பரிசோதகர் தரம்-III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய திறந்த போட்டிப் பரீட்சை

வடக்கு மாகாணப் பொதுச சேவையின் வருமானப் பரிசோதகர் தரம் -III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது எதிர்வரும் 08.06.2019ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே 31.05.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ அல்லது 021 2219939 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என ஆணைக்குழுவின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (இ)

# வெடிபொருட்கள் செயலிழப்பு!

(சாவகச்சேரி)

தென்மராட்சி-தனங்கிளப்புப் பகுதியிலுள்ள காணி ஒன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒரு தொகை வெடிபொருட்கள் வெடிக்காத நிலையில் இனங்காணப்பட்டன.

குறித்த வெடிபொருட்கள் நேற்று வியாழக்கிழமை மதியம் விசேட அதிரடிப் படையினரால் செயலிழக்க வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. (இ-30)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## திரும்பி வரக்காரணம்

மேன்மையான அறிவாற்றலின் (இறைவனின்) முடிவற்ற அமைப்புச் சக்தியில் நம்பிக்கை வை. "எல்லாம் அவன் இச்சைப்படி நடக்கும்" என மனமார உணர். அப்போது "அது சரியில்லை" என்னும் விதை எரிந்து போய்விடுகிறது. "எல்லாம் அவன் இச்சைப்படி நடக்கும்" என்பது பூரண மனநிறைவு நிலை, அன்பு நிலை. எதிர்காலத்தைப் பற்றி நாம் எதுவும் சொல்லக்கூடத் தேவையில்லை. "இப்போது நடப்பதும் அவன் செயலே தான்"

கேள்வி: அப்படியானால் நடப்பது எல்லாமே கடவுளின் இச்சை தானா?

ஸ்ரீஸ்ரீ: ஆம் " இதுமாதிரி நடக்கக்கூடாது" எனும் எண்ணமும் கூட.

உன் கர்மா இருக்கும்வரை – செய்யவேண்டும் எனும் நினைவு இருக்கும் வரை- நீ செயற்பட வேண்டும். செயற்பட வேண்டும் எனும் மனப்பாங்கு தளர்வடையும் போது முழுமையான முயற்சியற்ற தன்மை நிகழ்கிறது. அத்தன்மையில நம்பந்தமற்ற அன்பு பிறக்கிறது. ஒவ்வொரு உயிரும் அந்த அன்பிற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறது. (முற்றும்)

# இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

விடியற்காலை சேவல் கூவுகின்றது. ஆனால் உலக மக்கள் கோழி கூவுகின்றது என்கிறார்கள். காரணம் இதுதான்.

கோழி என்பது ஆண் பெண் என்ற இருபாலுக்கும் பொது. கோழி என்றால் அது சேவலையும் குறிக்கும். முருகப்பெருமான் திருக்கரத்தில் இருப்பது சேவல் கொடி.

அருணகிரிநாதர் கோழிக்கொடியோன் அடிபணியாமல் குவலயத்தே வாழக்கருதும் அறிவிலிகாள் என்று கந்தரலங்காரத்தில் பாடியிருக்கின்றார். ஆகவே கோழி கூவுகின்றது என்பதில் பிழை இல்லை.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## காலையில் கண்விழித்ததும் இவற்றையெல்லாம் பார்த்தால் அதிர்ஷ்டமாம்

காலையில எழுநததும கண விழித்து முதன முதலில் சூரியனை தரிசிப்பது சிறந்தது.

தாமரைப்பூ, சந்தனம், கடல் மற்றும் அழகான இயற்கைக் காட்சிகளை காலை, கண் விழித்ததும் பார்ப்பது உடலுக்கும், மனதிற்கும் உற்சாகம் தந்து அன்றைய தினத்தை சிறப்பானதாகும்.

மயிற்களை வில்வமரம், சிவலிங்கம், கோயிலின் ராஜகோபுரம், உங்கள் வீட்டில் வளர்க்கப்படும் பசுமாடு, நறுமணம் வீசும் மலர்கள் நிறைந்த பூந்தோட்டம் ஆகியவற்றை காலையில் எழுந்ததும் கண் விழித்து பார்ப்பது மனதிற்கு உற்சாகத்தை தந்து அன்றைய தினத்தை இனிமையான நாளாக ஆக்குகிறது.

தினமும் அதிகாலையில் பிரம்ம முகூர்த்த வேளையில் தூக்கத்திலிருந்து எழுந்து, நடைபயிற்சி செய்து, சூரிய தரிசனம் செய்தால் அனைத்து தினங்களும் சிறப்பானதாக இருக்கும் என்பது அனுபவம் வாய்ந்த பெரியோர்களின் கருத்தாக உள்ளது. (முற்றும்)

# இறுதிக்குள் நுழைந்தது இளங்கதிர்




வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கம் வல்வைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரினை தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக நடத்தி வருகின்றது.

இப் போட்டியில் இளங்கதிர் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இவ் வருடத் தொடரில் 10 அணிகள் களமிறங்கி இருந்தன. இளங்கதிர் அணி தான் விளையாடிய 5 போட்டிகளிலும் வெற்றி பெற்று அதாவது லீக் சுற்றில் தீருவில், உதயசூரியன், சைனிங்ஸ் A, ரேவடி B அணிகளையும் பிளே ஒப் சுற்றில் ரேவடி அணியையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது. கடந்த வருடம் இறுதிப் போட்டியில் களமிறங்கிய அதே அணிகளான சைனிங்ஸ் மற்றும் இளங்கதிர் அணிகளே இவ் வருடமும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# சுழிபுரம் காளிகாம்பாள் வெற்றிக்கிண்ணம் சுன்னாகம் ஸ்ரார் போய்ஸ் அணி சம்பியன்





புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு தொகை நிதி சேகரித்து வழங்கும் முகமாக சுழிபுரம் காளி அம்பாள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை காளி அம்பாள் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றிருந்தது.

அளவெட்டி விநாயகர் மற்றும் சுன்னாகம் ஸ்ரைம் போய்ஸ் கழகங்கள் இறுதிப் போட்டியில் பலப் பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சுன்னாகம் ஸ்ரார் போய்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்று அசத்தியது.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதிகளான ஸ்ரீலங்கா சுதந்திர தமிழர் ஒன்றியத்தின் வலிகாமம் இணைப்பாளரும் காங்கேசன்துறை தொகுதி அமைப்பாளருமான திருஞானம் ஞானசீலன் மற்றும் யாழ். மாவட்ட அமைப்பாளர் வட்டுக்கோட்டை தொகுதி இணைப்பாளருமான றஜீகரன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணமும் பெறுமதியான பரிசில்களையும் வழங்கி கௌரவித்திருந்தனர்.

விளையாட்டு அரங்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனினால் 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு கழகத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது (க-60)

# கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணம் இறுதிப் போட்டியில் ரி.சி.சி.அணி



கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் வருடா வருடம் (26 ஆவது ஆண்டு) நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் 2 ஆவது அரை இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ரி.சி.சி. அணி சென்றலைட்ஸ் அணியை 50 ஓட்டங்களால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ரி.சி.சி.அணி 29.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றனர்.

அனுரதன்-49, ராஜ்-10, றெகான்-32, சுரேஸ்-35, சுரேந்திரன்-47, றெயின்தன்-14 ஓட்டங்களைப் பெற்றனர்.

டார்வின்-02, சாள்ஸ்-01, சலன்ராஜ்-01, ஜெரிக்-02, மயூரன்-02 இலக்குகளைப் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 25.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 159 ஓட்டங்களை பெற்றுள்ளது.

கௌதமன்-40, ஜெனோஸன்-49, டார்வின்-21, மயூரன்-17 ஓட்டங்களைப் பெற்றனர். சுரேஸ்-01, பிரபு-03, தீபன்-04, ராஜ்-01, றொகான்-01 இலக்கினைக் கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் தரவரிசை பட்டியலுக்கு ரி.சி.சி. 6.59 புள்ளிகளையும் சென்றலைட்ஸ் அணி 2.59 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (கு)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# எனக்கு வந்த நிலை வீராட்டிற்கு வரக்கூடாது உலகக் கிண்ணம் குறித்து சச்சின்



விராட் ஹோலி மட்டும் சரியாக விளையாடினால் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாது என்று சச்சின் டெண்டுல்கர் எச்சரித்துள்ளார்.

உலகக் கிண்ணம் ஒருநாள் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி இங்கிலாந்தில் தொடங்குகிறது. இந்தத் தொடரில் பங்கேற்கவுள்ள இந்திய அணி வீரர்கள் இங்கிலாந்து சென்றுள்ளனர்.

இந்திய அணி தன்னுடைய முதல் போட்டியில் தென்னாப்பிரிக்க அணியை ஜூன் 5 ஆம் திகதி எதிர்கொள்கிறது.

இந்நிலையில், விராட் ஹோலி மட்டும் சரியாக விளையாடினால் உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாது. மற்ற வீரர்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று இந்திய அணியின் முன்னாள் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சச்சின் அளித்த பேட்டியில், ஒவ்வொரு வீரரும் ஒவ்வொரு போட்டியில் ஜொலிப்பார்கள். ஆனால், அணியிலுள்ள பெரும்பாலானோரின் ஒத்துழைப்பு இல்லாமல் பெரிய அளவில் வெற்றிபெற முடியாது.

ஒரு தனிப்பட்ட வீரர்களின் திறமையால் மட்டும், தொடரை வென்றுவிட முடியாது. மற்றவர்களும் தங்களது பங்களிப்பை முக்கியமான நேரங்களில் அளிக்க வேண்டும்.

அப்படி நடக்கவில்லை என்றால் ஏமாற்றம்தான் மிஞ்சும். மற்றவர்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால் 1996, 1999 மற்றும் 2003 உலகக் கிண்ணத் தொடரில் தனக்கு ஏற்பட்ட சுமைபோல் விராட் ஹோலிக்கு ஏற்பட்டுவிடும்.

நம்முடைய வீரர்கள் நிறைய போட்டிகளில் விளையாடியிருக்கிறார்கள். 4,6 அல்லது 8 என எந்த இடத்தில் இறங்கினாலும் விளையாடுவார்கள். சூழ்நிலையைப் புரிந்து கொண்டு விளையாடுவதுதான் முக்கியம்.

நம்முடைய அணியில் 8-10 வருடம் அனுபவம் வாய்ந்த வீரர்கள் இருக்கிறார்கள். அதே போல், குல்தீப், சாஹல், ஹர்திக் பாண்ட்யா, பும்ரா போன்ற திறமைவாய்ந்த இளம் வீரர்கள் இருக்கிறார்கள்.

உலகக் கிண்ணத்தை வெல்ல நமக்கு அதிக வாய்ப்பு உள்ளது என்று சச்சின் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (க)

## விமல் வீரவன்சவு...

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. இதன்போது பிரதான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், அமைச்சர் மங்கள சமரவீர வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன்போது தெளிவொன்றை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்து விமல் வீரவன்ச எம்.பி எழுந்து நின்றார். அதற்கு சபாநாயகர், உரை முடிவடைந்த பின்னர் கேளுங்கள் அமைச்சர் தெளிவுபடுத்துவார் என்று தெரிவித்துக்கொண்டபோது, தொடர்ந்தும் தனக்கு சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்று விமல் வீரவன்ச எம்.பி கோரி நின்றார்.

இதன்போது சபாநாயகர், பாராளுமன்ற நடவடிக்கைகளை இறுதிவரை கொண்டு செல்லவிடாது நீங்கள் தடையாக இருந்தீர்கள். அதேபோன்று நம்பிக்கையில்லா பிரேரணைக்கு திகதி நிர்ணயிக்காவிட்டால் பாராளுமன்றத்தை சுற்றிவளைப்பதாக தெரிவித்தீர்கள். அத்துடன் கட்சி தலைவர் கூட்டத்தின் போது பாராளுமன்றத்தை சுற்றிவளைப்பதாக தெரிவித்தீர்கள். அதனால் அச்சுறுத்தி எதனையும் சாதித்துக்கொள்ளலாம் என்று நினைக்கவேண்டாம் அதற்கு நான் ஒரு போதும் இடமளிக்கமாட்டேன் என்றார். (ம-3)

## இரண்டு வாரத்து...

ளுமன்ற தெரிவுக்குழுவின் முதலாவது அறிக்கை இரண்டு வாரத்திற்குள் சமர்பிக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இதற்கான வேண்டுகோளினை நேற்று சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் விடுத்துள்ளார்.

மேலும், அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக இரண்டு நம்பிக்கையில்லா பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனால் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையினை இரண்டு வாரத்திற்குள் சமர்பிக்கப்படவேண்டும். அப்போது தான் அடுத்த கட்டம் குறித்து தீர்மானித்து நடவடிக்கை எடுக்க முடியும்.

அரசாங்கத்திற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளமையினால் அதற்கு முன்னுரிமை வழங்கி செயற்படவேண்டியது பாராளுமன்றத்தின் சம்பிரதாயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## அமைச்சர் ரிஷா...

டிகள் சம்பந்தமான சாட்சிகளை நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தின் போது பாராளுமன்றத்தில் முன்வைப்போம் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ரிஷாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்திற்கு எடுப்பதற்கான திகதி தொடர்பில் கலந்துரையாடலுக்கு சபாநாயகர் சந்தர்ப்பம் வழங்கிய போதிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் ரிஷாத் பதியுதீனை காப்பாற்றுவதாகவே அமைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3)

## யாழ். பல்கலை...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர், செயலாளர் மற்றும் மருத்துவ பீட சிற்றுண்டிசாலை நடத்துநர் ஆகிய மூவருக்கும் எதிரான பயங்கரவாத தடுப்பு சட்டம் மற்றும் அவசர கால சட்டத்தின் கீழ் வழக்கை நீதிமன்றிலிருந்து கைவாங்கி, அவர்களை முழுமையாக விடுவிக்கக் கோரி பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்திற்கு முன்பாக நேற்றைய தினம் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் பல்கலை மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியதாகவும் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகும் எனவும் மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மாணவர் ஒன்றியம் அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது வருமாறு,

கடந்த உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடைபெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலை தொடர்ந்து பல்கலைக் கழகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது நீதியற்ற முறையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மாணவர் ஒன்றிய தலைவர், செயலாளர் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஊழியர் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் அவர்களின் முழுமையான விடுதலையை வலியுறுத்தி மாணவர்களாகிய நாம் பல்கலைக் கழக கல்வி நடவடிக்கைகளை புறக்கணித்திருந்தோம்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தகுதி வாய்ந்த அதிகாரியுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் முடிவில் தகுதி வாய்ந்த அதிகாரி பல்கலைக்கழக வளாகத்தில் இக் கைதுகள் இடம்பெற்றமையால் தனக்கும் கூட்டுப்பொறுப்பு உண்டு என்ற ரீதியில் மாணவர்களின் விடுதலை தொடர்பில் தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதுடன் அவர்களின் கல்விக் காலம் முடிவதற்கு முன்னரே அவர்களை முழுமையாக விடுதலை செய்விக்க மாணவர்களோடு பக்கபலமாக நிற்பதாகவும் அது தொடர்பாக ஜனாதிபதியுடன் சந்திப்பினை மேற்கொள்வதாகவும் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் குறித்த குண்டுவெடிப்பு சம்பவம் இடம்பெற்ற காலம் சில பீடங்களிற்கு பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த காலமாகையால் மாணவர்களின் பரீட்சை சார் உளவியல் தாக்கங்களை கருத்திற் கொண்டும் ஏனைய பீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை கருத்திற் கொண்டும் தகுதி வாய்ந்த அதிகாரியின் வாக்குறுதியினை ஏற்றும் தற்காலிகமாக எமது கல்விக் புறக்கணிப்பினை நிறுத்திக் கொள்கின்றோம்.

அந்த வகையில் யாழ் பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் 27.05.2019 (திங்கட் கிழமை) முதல் வழமைபோல் இடம்பெறும். மாணவர்களாகிய நாம் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டு மாணவர்களின் விடுதலைக்கான நடவடிக்கைகளை ஒன்றிணைந்து மேற்கொள்வோம் என்பதுடன் எமது சக மாணவர்களின் பூரண விடுதலை சாத்தியமாகாத பட்சத்தில் இக் கல்விப் புறக்கணிப்பினை தொடர்ந்து பல ஜனநாயகப் போராட்டங்களையும் முன்னெடுப்போம் என்பதனையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3-9)

## மீண்டும் பிரதம...

அதன் தலைவர் ராகுல் காந்தி அறிவித்துள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம், உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிதான் என்பதை இந்திய பொதுமக்கள் தீர்மானித்துள்ளனர்.

வெற்றி பெற்ற நரேந்திர மோடிக்கு வாழ்த்துக்களைக் கூறிக்கொள்வதாகவும், தோல்வி குறித்து வேறெதனையும் கூற விரும்பவில்லை என்றும் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் 300க்கும் அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றிய பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி தெளிவான பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கவுள்ளது.

இந்த தேர்தல் மோடி மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக மக்களது கருத்துக் கணிப்பாகவே பார்க்கப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. சுமார் 90 கோடி மக்கள் இந்த தேர்தலில் வாக்களித்திருந்தனர்.

2000க்கும் அதிகமான கட்சிகளின் 8000க்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.

இந்த தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான கூட்டணி மொத்தமாக 343 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

கடந்த தேர்தலில் பெற்ற மொத்த ஆசனங்களைக் காட்டிலும் 9 ஆசனங்கள் குறைவடைந்துள்ளது.

காங்கிரஸ் கூட்டணி கடந்த தேர்தலை விட 25 ஆசனங்கள் அதிகமாக பெற்று, 90 ஆசனங்களை இந்த முறை பெற்றுள்ளது. ஏனைய கட்சிகள் 108 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளன. (ம-3)

## மிருசுவிலில் குடு...

இருந்து நேற்று வியாழக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த குடும்பஸ்தர் புதன்கிழமை மாலை மிருசுவில் பகுதியில் இருந்து கல்வயலில் உள்ள தனது உறவினர் ஒருவரின் வீட்டிற்கு வந்து தங்கியுள்ளார். இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை சடலமாக உறவினர்கள் அவரை மீட்டுள்ளனர்.

சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-30)

## மக்கள் அரசிய...

உறுப்பினர்களும் பொருத்தமற்றவர்கள் என்று மக்கள் வெறுக்கும் அளவிற்கு அரசாங்கம் அரசியலை மழுங்கடித்துள்ளது என எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இன்று அரசியல் ரீதியில் மக்கள் பல மாறுப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகின்றார்கள். 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பொருத்தமற்றவர்கள் என்று ஒரு தரப்பினரும், அரசியல் தொடர்பற்ற ஒரு புதிய தலைமைத்துவம் அவசியம் என்று பிறிதொரு தரப்பினரும் கருதுகின்றார்கள். கடந்த நான்கு வருட காலமாக அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் மக்களுக்கு எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாக காணப்பட்டன. இதன் காரணமாகவே மக்கள் அரசியலை வெறுக்கின்றார்கள்.

அத்தோடு, ஒரு தரப்பினர் மக்கள் மத்தியில் அடிப்படைவாத கருத்துக்களை பரப்பி விடுகின்றார்கள். இவர்கள் அரசியல்வாதிகளின் முகவர்களாக செயற்படுகின்றார்கள். மனம் போன போக்கில் அரசாங்கம் செயற்பட்டமையின் காரணமாக பல விளைவுகள் இன்று ஏற்பட்டுள்ளது. இந்நிலைமை தொடருமாயின் நாட்டு மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்படும்.

மேலும், தற்போதைய அரசாங்கம் தேர்தலின் ஊடாக படுதோல்வியடையும் என்பதை சர்வதேசம் அறிந்துள்ளது. தீவிரவாத தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் கிழக்கு மாகாணத்தை சார்ந்தவர்களாக காணப்படுகின்றார்கள்.

இன்று அரசாங்கத்தை மக்கள் நேரடியாக விமர்சிக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## புத்தர் சிலையை...

குறித்த இடம் தொல்பொருள் திணைக்களத்திற்கு கையகப்படுத்தியிருந்த நிலையில் அவ்விடத்தில் எவ்வாறு புத்தர் சிலை வைக்க முடியும் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பில் மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச சபை தவிசாளர் வைத்திய கலாநிதி ஞான குணாளன் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியதனூடாக குறித்த பணிகளை உடனடியாக நிறுத்துவதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்திருந்த நிலையில் நேற்று மீண்டும் பிள்ளையார் இருந்த இடத்தில் அத்திபாரம் உடைக்கப்பட்டு புத்தர் சிலை வைக்கும் பணிகள் தொடர்வதாகவும் தென்கயிலை ஆதீனம் குருமார்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மீண்டும் குறித்த விடயம் தொடர்பாக நேற்று திருமலை மாவட்டச் செயலருக்கும் பிரதேச சபை தவிசாளர் வைத்திய கலாநிதி ஞான குணாளனுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நாட்டில் அவசரகால சட்டம் அமுலில் உள்ள நிலையிலும் இவ்வாறான அத்துமீறல்கள் இடம்பெறுவது கவலையளிப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-3)

## போருக்கு முன்ன...

ரொஷான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். யாழில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த இரண்டு வருடங்களாக வடக்கு மாகாணத்தில் பணியாற்றியுள்ளேன். வடக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதே எனது பணிக்காலத்தின் முக்கிய நோக்கமாக விளங்கியது. அதன்படி, பெரும்பாலும் வடக்கில் சமாதானம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு மக்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொலிஸாருக்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கினர்.

இந்நிலையில், வடக்கு மாகாணத்தை யுத்தத்திற்கு முன்பிருந்த நிலைக்கு கொண்டு வருவதே தற்போதைய நோக்கமாக உள்ளது.

அதன்படி, விரைவில் வட மாகாணத்தை பழைய செழிப்பான நிலைக்கு கொண்டு வருவோம். வட மாகாணம் பழைய நிலைக்கு திரும்பும் எனத் தெரிவித்தார். (ம-3)

## தி.மு.க அபார...

தமிழ்க் கட்சி மறிய எழுச்சி கண்டுள்ளது.

தமிழகத்தில் பா.ஜ.க வேட்பாளர் தமிழிசை சௌந்தராஜன் மற்றும் எச்.ராஜா ஆகியோர் படுதோல்வியடைந்துள்ளனர். 12 நாடாளுமன்ற தொகுதிகளில் கமலின் மக்கள் நீதி மய்யம் ஆதிக்கம் செலுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியலை முன்வைத்து நாம் தமிழர் கட்சியை சீமான் நடத்தி வருகின்ற நிலையில் அவரின் இந்த பேரெழுச்சி சிலதலைவர்களுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

தூத்துக்குடி மக்களவைத் தொகுதியில் 3,47,209 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க வேட்பாளர் கனிமொழி வெற்றி பெற்றார்.

தி.மு.கவின் சார்பில் கனிமொழியும் அ.தி.மு.க கூட்டணி சார்பில் பா.ஜ.க. வேட்பாளர் தமிழிசை சௌந்தராஜனும் போட்டியிட்டனர்.

தமிழகத்தில் 12 மக்களவை தொகுதிகளில் 3ம் இடத்தை பெற்றதன் மூலம் மக்கள் நீதிமய்யம் கட்சி விஸ்வரூபம் எடுத்துள்ளது.

தமிழகத்தில் வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை, கோவை, பொள்ளாச்சி, திருப்பூர், ஸ்ரீபெரும்புதூர், ஈரோடு, சேலம், மதுரை, திருவள்ளூர் ஆகிய மக்களவை தொகுதிகளிலும் புதுவை யூனியன் பிரதேச மக்களவை தொகுதியிலும் மக்கள் நீதி மய்யம் கட்சி மூன்றாம் இடம் பிடித்துள்ளது. (ம-3)


நீரோகா லக்ன ஜய
திகதி 2019/05/23
சீட்டிழுப்பு இலக்கம் 549
லக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 13 17 19 56

மஹஜன சம்பத
திகதி 2019/05/23
சீட்டிழுப்பு இலக்கம் 3922
V 2 3 7 5 3 1

கொவிசெத
திகதி 2019.05.23
சீட்டிழுப்பு இலக்கம் 2126
A 04 38 41 46

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1544 திகதி 2019/05/23
E 33 49 67 72
0243529

## மோ.சைக்கிள்...

முன்னாள் ஓய்வுபெற்ற தீவக வலய ஆசிரிய ஆலோசகரான பிரான்சிஸ் திருஞானசீலன் (வயது70) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காங்கேசன்துறை பிரதான வீதியை நேற்றுக் காலை நடந்து கடக்க முற்பட்ட வேளை எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையில் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி குறித்த வயோதிபர் உயிரிழந்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.(ம-10-108)

## எந்த சதித்திட்டத்தி...

கொண்டுவரப்பட்டதாகும்.

முஸ்லிம் மக்களை எமது அரசாங்கத்தில் இருந்து இல்லாமலாக்குவதற்கான திட்டமாகவே இது அமைந்திருக்கின்றது.

இவர்களின் எந்த சதித்திட்டத்தினாலும் எமது அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை தாக்குதலானது சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட தாக்குதலாகும். இதனை கட்டுப்படுத்த சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். என்றாலும் நாட்டில் இருக்கும் வங்குரோத்து அரசியல்வாதிகள் இந்த தாக்குதலை பயன்படுத்திக் கொண்டு சிங்கள, முஸ்லிம் பிரச்சினையொன்றை ஏற்படுத்தி அனைத்து முஸ்லிம் மக்களையும் பயங்கரவாதிகளாக காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

சர்வதேச பயங்கரவாத தாக்குதலானது பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. என்றாலும் எமது நாட்டில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு சில வாரங்களில் அதனை கட்டுப்படுத்தி மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவர எமது பாதுகாப்பு பிரிவுக்கு முடியுமாகியுள்ளது.

அதற்கு எமது நாட்டு முஸ்லிம் மக்களின் 90 வீதமானவர்களின் பூரண ஆதரவு இருந்தமையே காரணமாகும். அதற்கு நாங்கள் நன்றிகூற கடமைப்பட்டுள்ளோம். என்றாலும் மஹசோன் பலகாய போன்ற இனவாத அமைப்புகள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமற்றதாக்க முஸ்லிம்களுக்கு சொந்தமான வியாபார நிலையங்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தி இருந்தது.

முஸ்லிம் மக்கள் எமது அரசாங்கத்துடன் இருக்கின்றனர். அவர்களை தூரப்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும். இவர்களின் எந்த சதித்திட்டத்தினாலும் இலங்கை மக்கள் எம்முடன் இருக்கும்வரை எமது அரசாங்கத்தை வீழ்த்த முடியாது என்றார்.(ம-3)


**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

சகல வசதிகளுடன் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.
8-ம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு.
தொடர்புகளுக்கு: 077 057 9506, 076 254 6102, 077 676 4342

**மலேசிய வேலைவாய்ப்பு பணிப்பெண்கள்**

மலேசிய தமிழ் வீடுகளில் பாதுகாப்பான வேலை ஏற்பாடு!
முற்றிலும் இலவச பயணம் — சம்பளம் ரூ.58,000/-
உணவு, மருத்துவம், காப்புறுதி, விமானச்சீட்டுக்கள் இலவசம்
விபரங்களுக்கு 077 00 38 215, 021 221 9 221
எமரல்ட் ஐல் License No. 2268 — 221-1/1, மின்சார நிலைய வீதி (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் • யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
V2 TRAVELS

**Vacancy for English Teachers**

IELTS, IELTS Life skills
& English courses
Full time teachers
Call : 0777033039


# மரண அறிவித்தல்



## கதிர்காமமுதலி தங்கவேல்

(ஓய்வுபெற்ற காசாளர் - மானிப்பாய் ப.நோ.கூ சங்கம்)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை கந்தஉடையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமமுதலி தங்கவேல் அவர்கள் நேற்று *(23.05.2019)* வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமமுதலி - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், நாகநாதர் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வபூரணி அவர்களின் அன்புக் கணவரும், யோகநாயகி, சண்முகதாசன் ஆகியோரின் சகோதரரும், பரிமளகாந்தி, மோகனவதனி (நோர்வே), தயாபரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரன், பாக்கியலிங்கம் ஆகியோரின் மாமனாரும், நிதுஷா, மதன், பிரதிகா, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.05.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தஉடையார் வீதி,
பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
021 791 2219

(C-6464)


**IT TRAINING (தொழில் வாய்ப்புடன்)**

சம்பளத்துடன் கூடிய கணினிப் பயிற்சியின் முடிவில் 35,000/= க்கு சம்பளம் எடுக்கும் வகையில் வேலைவாய்ப்பும் பெற்றுக் கொடுக்கப்படும். (Programming, Web Developement, Hardware, Marketing, Data Entry,...)
MICRODGITEL
தொடர்பு: 076 300 5506

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
> பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
> அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
> யாரும் படிக்கலாம். www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

**கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்**



வீட்டு கையியக்க மெசின் — வர்த்தக கையியக்க மெசின் — வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்
தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)
www.StringhopperMachine.com
Email : mo@college.ca (8716)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8880)

**British College of Higher Studies** (BCHS)

Diploma in English (Phase 1 & Phase 2)
அனைத்து வயதினருக்குமானது
Spoken English
வெளிநாடு செல்பவர்களுக்கான கற்கைநெறி
IELTS (Academic / General)
IELTS – Life skills
வார, வார இறுதி நாட்களிலும்... மாணவர்களுக்கு வசதியான நேரங்களில்
Sirambiyady Lane, Jaffna.
0212224550 / 0761380212

**விசேட வகுப்புக்கள்**

வட மாகாண வருமான பரிசோதகர்
சனி 25.05, ஞாயிறு 26.05, சனி 01.06, ஞாயிறு 02.06 புதன் 05.06 ஆகிய நாட்களில் 9.00 - 1.00 மணிவரை.
நாளாந்த கட்டணம் 200/=
முகாமைத்துவ உதவியாளர்
பிரிவு –I பிரதி சனி 9.00 - 2.00
பிரிவு– II பிரதி ஞாயிறு 9.00 - 2.00
பதிவாளர், புள்ளி விபரவியலாளர், சட்டமாணி, SLAS, SLEAS, வகுப்புக்கள் வழமையான நேரம் நடைபெறும்.
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவில்

**கருத்தரங்குத் தொடர்**

25.05.2019 சனி 9am - 2pm
P.கமல்தாசன் மற்றும் முதன்மை வளவாளர்கள்
உளச்சார்பு, மொழித்திறன்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0771116739, 0773867272

**கருத்தரங்குத் தொடர்**

SLAS, SLEAS, பதிவாளர், புள்ளி விபரவியலாளர் LLB, வட மாகாண ஆசிரியர்
25.05.2019 சனி 9am - 3pm
P.கமல்தாசன் - SLPS
K.தெய்வேந்திரம் - SLAS
K.சத்தியமூர்த்தி - AO
A.K.கீர்த்திராஜன் - MA
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0771116739, 0761661986

**நெல்லியடியில் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**

யூன் மாதம் நடைபெறும் வட மாகாண வருமானப் பரிசோதகர் தேர்வு விசேட வகுப்புக்கள்
பிரதி சனி 2.00 - 6.30 மணி
பிரதி ஞாயிறு 9.00 - 12.00 மணி
மொழித்திறன், உளச்சார்பு
வட மாகாண MA, (நீதிமன்ற பதிவாளர் M.A) SLAS/ SLES/ புள்ளிவிபரவியலாளர் வகுப்புக்கள்
இடம்: நெல்லியடி உயர் கல்லூரி (HNB Assurance மாடி, மேல்மாடி)
0774350958


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.